விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 273 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 02 வியாழக்கிழமை (18.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

SLIIT NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA(Hons)
(C-3909)
OCTOBER INTAKE | 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
SLIIT NORTHERN UNI.
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna
021 7534 807

## தொல்பொருள் சின்னமான
## மந்திரி மனையின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது




(யாழ்ப்பாணம்)

தொல்பொருள் சின்னமான மந்திரி மனையின் ஒரு பகுதி நேற்று இடிந்து விழுந்துள்ளது.

யாழ்ப்பாணம் இராசதானியை 15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மீதான புதிய பிரேரணை
## ஒத்திவைக்கும் கோரிக்கை பிரிட்டனால் நிராகரிப்பு



(ஜெனிவா)

பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய பிரேரணை குறித்து நடைபெற்ற உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடலின்போது இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான ஆதா 15ஆம் பக்கம் பார்க்க

## மகிந்த - விமல் சந்திப்பு
## தெற்கு அரசியலில் பரபரப்பு



02ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் ஷெல் அடையாளம்



15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.கடவுச்சீட்டு அலுவலகத்துக்குள்
## புகுந்த வெள்ள நீர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நேற்றுக்காலை பெய்த கனமழை காரணமாக யாழ்.கடவுச்சீட்டு அலுவலகத்திற்குள் வெள்ளநீர் 15ஆம் பக்கம் பார்க்க

## கறுப்பு இராச்சியமாகச் செயற்படும்
# பாதாளக் குழுக்களை இல்லாதொழிப்பேன்
## ஜனாதிபதி அநுர சூளுரை



(கொழும்பு)

கறுப்பு இராச்சியமாகச் செயற்படும் ஒழுங்கமைக்கப்பட்ட பாதாளக் குழுக்களை முழுமையாக இல்லாதொழிப்பேன் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சூளுரைத்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட
## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்துத் தொடர்பான யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் 15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் பொறுப்புக்கூறலுக்கு ஐ.நா தீர்மானம் இன்றியமையாதது
## மனித உரிமைகள் கண்காணிப்பகம்



(கொழும்பு)

இலங்கையின் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்துக்கு ஐ.நா தீர்மானம் இன்றியமையாதது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியப் பிரதிப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி வலியுறுத்தியுள்ளார். 02ஆம் பக்கம் பார்க்க

## திலீபனுக்கு அஞ்சலி செலுத்த சென்ற கடற்றொழில் அமைச்சரை
## வழிமறித்த முன்னணியினர்



(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தச் சென்ற கடற்றொழில் அமைச்சரை தமிழ்த் தேசிய 15ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவு புதைகுழி வழக்கு
## அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு மனிதப் புதைகுழி தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாரினால் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கின் அறிக்கையை நவம்பர் 12ஆம் 16ஆம் பக்கம் பார்க்க

## கஞ்சா கலந்த மாவாவுடன்
## நாவாந்துறையில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை - மண்பிட்டி பகுதியில் நீண்ட காலமாக கஞ்சா 15ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் பிமல் இன்று யாழ்.விஜயம்
## கொழும்புத்துறை இறங்குதுறை புனரமைப்பை ஆரம்பித்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை மீன்பிடி இறங்குதுறை நடுத்தர முதலீட்டுடன் மீளமைக்கும் செயற்பாடு இன்று வியாழக்கிழமை கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் துறைமுகங்கள், சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோரினால் 15ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு ஆளுநர் தலைமையில்

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை மாலை நடைபெற்றது.

நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அமைக்கப்பட்ட சிகிச்சைப் பிரிவை இயக்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் மருத்துவமனையின் பணிப்பாளரை பாராட்டுவதாகக் குறிப்பிட்ட ஆளுநர், அவரைப் போன்று ஏனைய மருத்துவமனைப் பணிப்பாளர்களும் செயற்பட முன்வர வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் ஆளணி மற்றும் ஏனைய நிர்வாகத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு எப்போதும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் ஆளணிகளின் தேவைப்பாடுகள், கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் பூர்த்தி செய்யப்படாத விடயங்கள் மற்றும் நிர்வாக ரீதியான ஏனைய தேவைப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பில் மருத்துவமனைப் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார். ஒவ்வொரு விடயமும் தனித்தனியாக ஆராயப்பட்டு தீர்வு வழங்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் - நிதி, வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர், யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவமனை அத்தியட்சகர் உள்ளடங்கலாக மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.(ம-7)

## இலங்கை...

இதுகுறித்து அவரால் எழுதப்பட்டிருக்கும் கட்டுரையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

இலங்கை அரசாங்கத்தினால் 2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டது. அதன் விளைவாக ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். ஐக்கிய நாடுகள் சபையினால் கண்டறியப்பட்டதன் பிரகாரம் அப்போரில் ஈடுபட்ட இருதரப்பினராலும் சட்டங்களுக்குப் புறம்பான விதத்தில் மனிதகுலத்துக்கு எதிராக மிகமோசமான குற்றங்கள் இழைக்கப்பட்டன.

இருப்பினும் அவை இன்றளவிலே இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் சிலரால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் நிகழ்த்தப்பட்ட அட்டூழியங்களுக்கான எந்தவொரு எதிர்விளைவும் இல்லாததன் காரணமாக இது சாத்தியமாகியிருக்கின்றது.

இலங்கையில் இதுவரை ஆட்சிப்பீடமேறிய அரசாங்கங்கள் சர்வதேச சட்டத்தை நிலைநிறுத்துவதாக வாக்குறுதியளித்துவிட்டு, அதிலிருந்து விலகிச் செயற்பட்டுவந்திருப்பதன் மூலம், எதனைச் செய்தாலும் பின்விளைவுகளின்றி மீண்டுவிடலாம் என்பதைக் காண்பித்து வந்திருக்கின்றன.

ஆகையினாலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை பொறுப்புக்கூறலைத் தொடர்ந்து வலியுறுத்துவதுடன் இலங்கையினால் நிகழ்த்தப்பட்ட சர்வதேசக் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டுவதற்குரிய ஆணையை இம்மாதம் ஜெனிவாவில் நடைபெற்றுவரும் 60 ஆவது கூட்டத்தொடரில் மீளப்புதுப்பிக்கவேண்டும்.

இலங்கையில் சுமார் 26 வருடகாலமாக நீடித்த உள்நாட்டுப்போரின்போது பொது மக்கள் மீதான தாக்குதல்கள், சட்டவிரோத படுகொலைகள், வலிந்து காணாமலாக்கப்படல்கள் என்பன உள்ளடங்கலாக இருதரப்பினராலும் மிகமோசமான மீறல் குற்றங்கள் இழைக்கப்பட்டன.

இறுதிக் கட்டப் போர் இடம்பெற்ற சில மாதங்களில் எஞ்சியிருந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களும் தமிழ் பொதுமக்களும் இலங்கை இராணுவத்தினால் மிகக்குறுகிய பகுதிக்குள் சுற்றிவளைக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் பொது மக்களை மனிதக்கேடயங்களாகப் பயன்படுத்திய அதே வேளை, இலங்கை இராணுவம் மனிதாபிமான உதவிகள் உட்செல்வதைத் தடுத்ததுடன் குறித்த சில பகுதிகள்மீது வான் மற்றும் ஆட்டிலறி தாக்குதல்களை நடாத்துவதற்கு முன்னர் அவற்றை "யுத்த சூனிய வலயங்களாக" அறிவித்தன.

மருத்துவ சேவை வழங்கல்கள் தொடர்ந்து இலக்கு வைக்கப்பட்டன. இலங்கையில் 16 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்து, இன்னமும் தண்டிக்கப்படாமல் உள்ள இச்சம்பவங்கள், இன்றளவிலே காஸாவில் நிகழ்த்தப்படும் மீறல்களுக்கும், அங்கு பிரயோகிக்கப்படும் உத்திகளுக்குமான முன்னோடியாக உள்ளன.

ஜே.வி.பி எழுச்சி மற்றும் விடுதலைப்புலிகள் இயக்கத்துடனான யுத்தம் என்பவற்றுடன் தொடர்புபட்ட விதத்தில் நாடளாவிய ரீதியில் இதுவரை சுமார் 20 மனிதப்புதைகுழிகள் கண்டறியப்பட்டுள்ளன.

அவை பெரும்பாலும் வேறு பணிகளின்போது தற்செயலாகவே கண்டறியப்பட்டன. அண்மையில் அடையாளம் காணப்பட்ட செம்மணி மனிதப்புதைகுழியில் 1990 களில் இராணுவக் காவலின் கீழ் கொல்லப்பட்டிருக்கக்கூடும் என நம்பப்படும் 200 க்கும் மேற்பட்டோரின் எலும்புக் கூடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

இருப்பினும் போதிய தொழில்நுட்ப வசதிகள் இன்மை மற்றும் அரசியல் தன்முனைப்பு இன்மை போன்ற காரணங்களால் இதுவரையில் இலங்கையில் எந்தவொரு மனிதப்புதைகுழி தொடர்பிலும் விசாரணைகள் வெற்றிகரமான முறையில் முன்னெடுக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் இன்றியமையாததாகும்.

அது இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மாத்திரமன்றி, உலகெங்கிலும் தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை சவாலுக்கு உட்படுத்துவதற்கு அவசியமாகும் என வலியுறுத்தியுள்ளார்.(ம-7)

## மகிந்த...

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச அம்பாந்தோட்டை, தங்காலை கார்ல்டன் இல்லத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்தார்.

மொட்டுக் கட்சி தலைமையிலானவை கூட்டணியில் இருந்து வெளியேறி இருந்த விமல் அணியினர், மகிந்தவை நேற்று முன்தினம் அவசரமாகச் சந்தித்துப் பேசியுள்ளமை தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ம-7)


# மரண அறிவித்தல்

## தேவராசா இரத்தினபாக்கியம்



தோற்றம் 12.03.1942 மறைவு 15.09.2025

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் குருவீதி காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் நவாலி சம்பந்த பிள்ளையார் கோவிலடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா இரத்தினபாக்கியம் அவர்கள் கடந்த 15.09.2025 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தி - வள்ளி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னார் -நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் தர்மசீலன் (ஜேர்மனி) அவரின் அன்புத் தாயாரும் சுமித்திரா அவரின் அன்பு மாமியும் பவித்திரன், பவதாரணி, பகலவன், கலைவிழி, கனிமொழி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா, பொன்னுத்துரை, தேவராசா மற்றும் தவமணி, செல்வராசா(சின்னராசா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகேஸ், முருகேஸ், சின்னராசா, சிவக்கொழுந்து, சின்னம்மா மற்றும் செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும் ரவீந்திரன் அவர்களின் பெரிய தாயும் விமலநாயகி அவரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18.09.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எருக்கலம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

[illegible]

077 592 5484

நவாலி சம்பந்தபிள்ளையார் கோவிலடி,
நவாலி.

(5444)


## பாதாளக்...

கடவத்த மீரிகம மத்திய அதி வேக நெடுஞ்சாலை அபிவிருத்திப் பணிகளை நேற்று புதன்கிழமை (17) ஆரம்பித்து வைத்ததன் பின்னர் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற எண்ணக்கருவுக்கு உயிர்கொடுத்துள்ளோம்.ஆகவே எவரும் எதிர்பார்க்காத இடங்களில் சட்டம் சென்றுள்ளது.சட்டத்துக்கு மேற்பட்டவர்களாக இருந்தவர்கள் பலர் இன்று சட்டத்துக்குள் உட்பட்டுள்ளார்கள்.

ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள குழுக்களின் செயற்பாடு ஆயுதமேந்திய குழுக்களாகவும்,கறுப்பு இராச்சியமாகவும் காணப்படுகிறது. அதிகாரமிக்க இராணுவத்தினரால் பாதாள குழுக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.அவர்களின் போதைப் பொருட்களை பொலிஸார் விநியோகித்துள்ளார்கள்.பாதாள குழுக்களுக்கு அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள்.இதன் விளைவே இன்று பாரிய நெருக்கடியாக தோற்றம் பெற்றுள்ளது.

கறுப்பு இராச்சியமாக செயற்படும் ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள குழுக்களை முழுமையாக இல்லாதொழிப்பேன். இளைஞர் யுவதிகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கு கடுமையாகத் தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது.

நாட்டில் புற்றுநோய் போன்று காணப்படும் இலஞ்சம் மற்றும் ஊழல் நாட்டின் அபிவிருத்திக்கு பாரியதொரு தடையாக உள்ளது.கடந்தகால ஊழல் மோசடிகள் முறையாக விசாரிக்கப்படுகிறது. உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஊழல் மோசடியற்ற அரச நிர்வாகத்தை ஸ்தாபித்துள்ளேன்.இருப்பினும் ஒருசிலர் இன்றும் பழைய பழக்கத்தில் உள்ளார்கள்.

ஒன்று பழைய பழக்கத்தை திருத்திக் கொள்ள வேண்டும்.இல்லையேல் சேவையில் இருந்து விலக வேண்டும்.இல்லாவிடின் நாங்கள் அவர்களை பதவி விலக்குவோம்.இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடியற்ற கலாசாரத்தை உருவாக்க அரச அதிகாரிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சட்டத்துக்கு அமைய செயற்படுங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன் என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையில்லாப் பிரச்சினை தீவிரமடையும்!

## உலக வங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் அடுத்த பத்தாண்டுக்குள் வேலையின்மை பிரச்சினை தீவிரம் அடையும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.**

அடுத்த 10 ஆண்டுகளுக்குள் இலங்கை தொழிலாளர் பிரிவிற்குள் புதிதாக சுமார் ஒரு மில்லியன் பேர் இணைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் அந்தக் காலப் பகுதியில் 300,000 புதிய வேலைகள் மட்டுமே உருவாக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, வேலைவாய்ப்புகளை உருவாக்க தனியார் துறை வளர்ச்சியை ஊக்குவிப்பது அவசியம் என்று உலக வங்கியின் துணைத் தலைவர் ஜோஹன்னஸ் ஜூட் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் துணைத் தலைவரின் இலங்கைக்கான விஜயத்தின் பின்னர் உலக வங்கி வெளியிட்ட அதிகாரபூர்வ அறிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

உலக வங்கி குழு தனியார் மூலதனத்தை ஈர்ப்பதற்கும் போட்டித்தன்மை மற்றும் சேவை வழங்கலை வலுப்படுத்துவதற்கும் நாடு முழுவதும் வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கும் அரசாங்கத்துடன் கூட்டாக இணைந்து செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் துணைத் தலைவர், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடனான தனது கலந்துரையாடலில், நெருக்கடி நிலையில் இருந்து மீண்டெழும் இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மையை பாராட்டியுள்ளார்.

மேலும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும், தனியார் முதலீட்டை ஈர்க்கும் மற்றும் முக்கிய துறைகளை நவீனமயமாக்கும் சீர்திருத்தங்களை செயற்படுத்துவதில் அரசாங்கத்திற்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளார். (நி)

# இலங்கை போக்குவரத்து சபைக்கு விரைவில் பெண் சாரதிகள்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையின் பொது போக்குவரத்து சேவையில் பெண் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் விரைவில் சேர்க்கப்படுவார்கள் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போதே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அமைச்சர், 25 பேருந்து டிப்போக்களை நவீனமயமாக்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இ.போ.ச ஊழியர்களின் தற்போதைய பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக 750 புதிய சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் ஆட்சேர்ப்பு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி)

# இலங்கைக்கு நிதியுதவி வழங்கிய ஜப்பான்

(கொழும்பு)

இலங்கையின் பால் உற்பத்தித் துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் கடற்படையின் அதிகாரபூர்வ பாதுகாப்பு சேவைகளுக்கு உதவவும் ஜப்பான் அரசு 963 மில்லியன் ஜப்பானிய யென் (ரூ.1.94 பில்லியன்) மானியம் வழங்க ஒப்புக்கொண்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ஜப்பானுக்கு மேற்கொள்ளவிருக்கும் தனது உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இந்த திட்டங்கள் தொடர்பான தொடர்புடைய பிற ஆவணங்களில் கையெழுத்திட உள்ளார்.

அதன்படி, நிதி அமைச்சர் என்ற வகையில், இது தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுப்பதற்காக ஜனாதிபதி முன்வைத்த முன்மொழிவை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (நி)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.

### செல்லத்துரை நடேசபிள்ளை

திதி:- 18.09.2025

தோற்றம் 21.03.1936 மறைவு 26.09.2019



அன்பும் பண்பும் பாசமும் நிறைந்த எங்கள் தெய்வமே அப்பா
நீங்கள் இனிச்ச புளியடியான் பாதம் அடைந்து
இன்றுடன் ஆறு ஆண்டுகள் நிறைவடைகின்றதே அப்பா
ஆறு ஆண்டுகள் ஆனால் என்ன
ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் எங்கள்
நெஞ்சங்களில் வீற்றிருக்கும் தெய்வமானீர்கள் அப்பா
இனிச்சபுளியடியான் பாதத்தில் இருந்து
எங்களை ஆசீர்வதியுங்கள்

2ம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.


(1555)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில்

# வெள்ளி, வெண்கல பதக்கங்களை பெற்றது பூநகரி மத்திய கல்லூரி





அகில இலங்கை பாட சாலைகளுக்கான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி யில் கிளி/பூநகரி மத்திய கல்லூரி பாடசாலை வர லாற்றில் முதன்முறையாக வெள்ளி மற்றும் வெண்கல பதக்கங்களை கைப்பற்றி சாதனை படைத்துள்ளது.

அகில இலங்கை பாடசா லைகளுக்கு தேசிய மட்ட பளுதூக்கல் போட்டிகள் பொலநறுவையில் நடை பெற்று வருகின்றன.

இதில் கிளி/பூநகரி மத்திய கல்லூரியைப் பிரதி நிதித் துவம் செய்த இ.ஜெனிஸ்ரன் 20 வயதினருக்கான 55 கிலோ எடைப்பிரிவில் 145 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தை கைப் பற்றியும் ர.தனுகரன் 17 வயதினருக்கான 73 கிலோ எடைப் பிரிவில் 134 கிலோ பளுவைத் தூக்கி வெண் கலப் பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளனர். (நி-90)

## தேசிய மட்டத்தில் வரலாற்று சாதனை

# படைத்தது முத்துத்தம்பி ம.வி

யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம் அகில இல ங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் முதன் முறையாக தேசிய மட்டத்தில் வெள்ளிப் பதக் கத்தைக் கைப்பற்றி வர லாற்றுச் சாதனை படைத் துள்ளனர்.


அகில இலங்கை பாட சாலைகளுக்கு இடையி லான தேசிய மட்ட பளு தூக் கல் போட்டி பொலநறுவை யில் நடைபெற்று வருகிறது.

இதில் 17 வயதிற்கு உட் பட்ட ஆண்களுக்கான 96 கிலோ எடைப் பிரிவில் முத்துத்தம்பி மகா வித்தியா லய மாணவன் தி.பிரதீப் வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றி வரலாற்றுச் சாதனை பதிவு செய்துள் ளார். (3-90)



# 84 கிலோ பளுவை தூக்கி வெண்கலத்தை தட்டிச் சென்ற வடமராட்சி இந்து மகளிர்

அகில இலங்கை பாடசாலை களுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த பி.கயல்விழி வெண்கல பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.



அகில இலங்கை பாடசாலை களுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி பொலநறுவையில் நடைபெற்று வருகிறது.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த பி.கயல்விழி 59 கிலோ எடைப் பிரிவில் 84 கிலோ பளுவைத் தூக்கி வெண் கல பதக்கத்தை கைப்பற்றியுள் ளார். (நி-90)

# பளுதூக்கலில் வெண்கலப் பதக்கம் பெற்ற சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை



அகில இலங்கை பாடசாலை களுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த வி.தெபோரா வெண்கல பதக்கத்தை கைப்பற்றி யுள்ளார்.

அகில இலங்கை பாடசாலை களுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி பொலனறுவை றோயல் கல்லூரி உள்ளக விளை யாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த வி.தெபோரா 17 வயதிற்கு உட்பட்ட 64 கிலோ எடைப் பிரிவில் வெண்கல பதக்கத்தை கைப்பற்றி யுள்ளார். (நி-90)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடி மீண்டும் ஏற்படாது

## ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

2022-2023 பொருளாதார நெருக்கடியும் அதனால் ஏற்பட்ட சமூக துயரமும் தற்செயலானவை அல்ல என்றும், அவற்றிற்கு பல முக்கிய காரணிகள் இருந்தன என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மத்திய அதிவேக வீதி வேலைத்திட்டத்தின் கடவத்தை முதல் மீரிகம வரையிலான பகுதியின் கட்டுமானப் பணிகளை மீளத்தொடங்குவதற்கான ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றபோதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையில் இதுபோன்ற பொருளாதார நெருக்கடி மீண்டும் ஒருபோதும் ஏற்படாத வகையில் நாடு கட்டமைக்கப்படும் எனவும் ஜனாதிபதி இதன்போது மக்களுக்கு உறுதியளித்தார். ஒரு நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை கட்டுமானப் பணிகள் மூலம் மட்டும் உருவாக்கப்படுவதில்லை, மாறாக பல்வேறு வழிகளில் உறுதிப்படுத்தப்படுகிறது.

முழு பொருளாதாரமும் மக்களின் வாழ்க்கையும் பெரும் சரிவைச் சந்தித்துள்ள இத்தருணத்தில் 2026ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக பொருளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த நிகழ்வில் சீன அரசாங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கைக்கான சீன தூதுவர் சீ ஜீஸென்ஹொங் வும் இணைந்துகொண்டதுடன் இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட சீனா விரும்புவதாகவும் கருத்து தெரிவித்தார். (நி)

# இந்திய மீனவர்கள் 7 பேருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(அராலி)

கடந்த மாதம் 13 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 07 இராமேஸ்வரம் மீனவர்களையும் இன்று வரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம்-ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த மாதம் 13 ஆம் திகதி நெடுந்தீவு அருகே கைது செய்யப்பட்ட 7 தமிழக மீனவர்களும் நேற்று யாழ். ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன் போதே இவர்களது விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்தமாதம் 20 ஆம் திகதி நீதிமன்ற உத்தரவின்பேரில் வழக்கு விசாரணைக்காக நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது 03.09.2025 வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டிருந்த நிலையில் அன்றையதினம் வழக்கினை எடுத்துக்கொண்ட நீதவான் நேற்றுவரை விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டார். மீண்டும் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது 7 மீனவர்களது விளக்கமறியலை இன்றுவரை நீடித்து நீதவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவை பிறப்பித்தார். (8-104)

### வடமராட்சியில்

# தொடர்ச்சியாக இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு



(தருமபுரம்)

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு தாளையடிப் பகுதியில் அமைந்துள்ள கடல் நீரை நன்னீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் பகுதியிலிருந்து சுமார் 200 மீற்றர்களுக்கு அண்மித்த பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, சட்டவிரோத மணல் மண் அகழ்வு மேற்கொண்டு வரும் கும்பல் ஒன்றே தினந்தோறும் பல டிப்பர்கள் மண்ணை செம்பியன் பற்று தாளையடி கடற்கரை வீதி வழியாக 24 மணிநேரமும் ஏற்றிச்சென்று விற்பனையில் ஈடுபடுகின்றது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் முறையிட்டும் எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

குறித்த மணல் மண் அகழும் பிரதேசத்திலிருந்து சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. தொடர்ச்சியாக இடம்பெறும் மணல் மண் அகழ்வால் வடமராட்சி கிழக்கு வளம் அழிக்கப்படுவது மட்டுமல்லாது மக்கள் குடியிருக்க முடியாதளவுக்கு கடல் நீர் உட்புகக்கூடிய நிலைமையும் தோன்றியுள்ளது. (8-316-104)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-20, கொழும்புத்துறை வீதி, 16A எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எம்.விஸ்வலிங்கத்தின் உரிமையாளர் என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை பிரசித்த நொத்தாரிசு சொ.சண்முகலிங்கம் முகதாவில் 2015.01.29 ஆம் திகதி 4986 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய பிரகடனப்படுத்தல் உறுதி மூலம் "மணற்காதோட்டம்" எனும் பெயர்கொண்ட விஸ்தீரணம் நிலப்பரப்பு 4 குளி 5.27 அளவு கொண்ட ஆதனத்தை யாழ்ப்பாணம் உடையார் வளவு, தில்லையீட்டி, சுன்னாகம் எனும் இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவர் குறித்த ஆதனம் தனது மாதாவழி முதுசமாக வந்தடைந்தது என்றும் குறித்த ஆதனத்தை கடந்த 20 வருடங்களிற்கு மேலாக பேணிப் பராமரித்து ஆட்சி செய்து வருகிறேன் எனவும் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் குறித்த வெளிப்படுத்தலில் ஆதன அட்டவணையில் சுண்டுக்குளி கோவிற்பற்று, சுண்டுக்குளி இறையில் அமைந்துள்ளதும் 2014 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 13 ஆம் திகதி உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.பரமேஸ்வரன் அவர்களால் 1967/2014 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தில் துண்டு ஒன்று என சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலப்பரப்பு 4 குளி 5.27 விஸ்தீரணம் கொண்ட ஆதனமான "மணற்காதோட்டம்" எனும் பெயர் கொண்ட ஆதனம் 1937 ஆம் ஆண்டளவில் இளையதம்பி பழனிவேல்பிள்ளை என்பவருக்கு அறுதி உறுதியாக எழுதப்பட்டு குறித்த இளையதம்பி பழனிவேல்பிள்ளை கொள்வனவு செய்திருந்தார் என்றும் 1979 ஆம் ஆண்டு கார்த்திகை 01 ஆம் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ்.சபநாயகம் முகதாவில் 26ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியில் வடக்கெல்லை பழனிவேலுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் என குறிப்பிடப்பட்டுள்ளது. என்றும் இது யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் D383/55 இல் பதியப்பட்டுள்ளது என்றும் குறித்த இளையதம்பி பழனிவேல்பிள்ளை மலேசியாவில் தொழில் புரிந்து வந்தார் என்றும் குறித்த ஆதனத்தின் எல்லைகளை பாதுகாத்து பேணி வந்தார் என்றும் அவ்வாதனத்தில் ஒரு சிறு வீடமைத்து அவர் வாழ்ந்து வந்தார் என்றும் குறித்த இளையதம்பி பழனிவேல்பிள்ளை உறுதிகள் ஆவணங்கள் ஏதும் எழுதாது வாரிசுகளுமின்றி மலேசியாவில் காலஞ்சென்று வீட்டார் என்றும் அவரது குறித்த ஆதனம் அவரின் வாரிசான அவரது தாயாருக்கு வந்து சேர்ந்த முதுசமும் உரிமையும் உரித்தும் ஆகும் என்றும் குறித்த ஆதனத்தை அவரது தாயார் பராமரித்து ஆட்சி செய்து வந்தார் என்றும் குறித்த இளையதம்பி பழனிவேல்பிள்ளையின் தாயார் எனது மாதா செல்லத்துரை பெண் பொன்னம்மாவின் சகோதரி என்றும் அவர் பிற்காலத்தில் குறித்த எனது தாயாரின் பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் வாழ்ந்து வந்தார் என்றும் குறித்த ஆதனத்தை எனது மாதா பேணி பாதுகாத்து வந்தார் என்றும் குறித்த எனது மாதாவின் சகோதரி வேறு வாரிசுகளின்றி காலஞ்சென்றதும் அவரின் ஒரே ஒரு சகோதரியும் சட்டபூர்வ வாரிசுமான எனது மாதாவிற்கு சகோதரி வழி முதுசமாகவும் உரித்தும் உரிமையுமாகவும் வந்து சேர்ந்தது என்றும் குறித்த எனது மாதா செல்லத்துரை பெண் பொன்னம்மா குறித்த ஆதனத்தை பேணி பாதுகாத்து ஆட்சிசெய்து வந்தார் என்றும் குறித்த எனது மாதா உறுதிகள் ஆவணங்கள் ஏதும் எழுதாது காலஞ்சென்றதும் அவரின் ஒரே ஒரு பிள்ளையும் சட்டபூர்வ வாரிசான எனக்கு வந்து சேர்ந்த மாதா வழி முதுசமும் உரிமையும் உரித்தும் ஆகும். என்றும் குறித்த ஆதனத்தை தற்போது நானே கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பேணி பாதுகாத்து பராமரித்து ஆட்சிசெய்து வருகிறேன் எனவும் வெளிப்படுத்தியுள்ளார்.

அதன் பின்னர் செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 2016.06.09 ஆம் திகதி 15271 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் கோண்டாவில் வடக்கு கலைவாணி விதி மகாதேவா தனராஜ் என்பவருக்கு குறித்த அதே அளவுகொண்ட ஆதனத்தை அறுதி விற்றுள்ளார்.

மகாதேவா தனராஜ் என்பவர் பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 2017.09.13 ஆம் திகதி 15856 இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவருக்கு அதே விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை அறுதியாக கையளித்துள்ளார்.

மேலும் செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 2017.09.13 ஆம் திகதி 15857 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நிபந்தனை அறுதி உறுதி மூலம் மேவின் சாள்ஸ் என்பவருக்கு அதே விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை நிபந்தனை அறுதி உறுதியாக கட்டுப்படுத்தியுள்ளார். அதன் பின்னர் மேவின் சாள்ஸ் என்பவர் பிரசித்த நொத்தாரிசு மு.றெமிடியஸ் முகதாவில் 2020.05.27 ஆம் திகதி 2465 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவருக்கு அதே விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை அறுதி விற்றுள்ளார்.

அடுத்து செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு மு.றெமிடியஸ் முகதாவில் 2020.05.27 ஆம் திகதி 2466 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நிபந்தனை அறுதி உறுதி மூலம் கபரியேல்பிள்ளை அன்ரன் பொஸ்கோவும் பெண் அஜந்தா கிறிஸ்றிஸ்ரினாவும் என்பவருக்கு அதே விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை நிபந்தனை அறுதி உறுதியாக கட்டுப்படுத்தியுள்ளார்.

அடுத்து செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு மு.றெமிடியஸ் முகதாவில் 2021.02.08 ஆம் திகதி 2637 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய ஆட்சி ஒப்படைத்தல் உறுதி மூலம் கபரியேல்பிள்ளை அன்ரன் பொஸ்கோவும் பெண் அஜந்தா கிறிஸ்றிஸ்ரினாவும் என்பவருக்கு அதே விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை ஆட்சி ஒப்படைத்தல் உறுதியாக கட்டுப்படுத்தியுள்ளார்.

அதன் பின்னர் கபரியேல்பிள்ளை அன்ரன் பொஸ்கோவும் பெண் அஜந்தா கிறிஸ்றிஸ்ரினாவும் என்பவர்கள் பிரசித்த நொத்தாரிசு நி.கேசாந் முகதாவில் 2021.12.20 ஆம் திகதி 962 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் செல்லத்துரை கிருபாரத்தினம் என்பவருக்கு அதே விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை அறுதி விற்றுள்ளார்.

மேலும் செல்லத்துரை கிருபாரத்தினமும் பெண் அகிலவல்லியும் பிரசித்த நொத்தாரிசு நி.கேசாந் முகதாவில் 2021.12.20 ஆம் திகதி 964 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் இல 54/4, ஆனைக்கோட்டை வீதி நவாலியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பரஞ்சோதிநாதன், பரஞ்சோதிநாதன் பெண் கலைமகள் அவர்களிற்கு நிலப்பரப்பு 2 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்திற்கு அறுதி உறுதி நிறைவேற்றியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லையில் சுண்டுக்குளி, கோவிற்பற்று சுண்டுக்குளி இறை **J/66** கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட "மணற்காதோட்டம்" நிலப்பரப்பு 4 குளி 5.27. இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி.புஸ்பராசா அவர்களால் 08.12.2021 ஆம் திகதி P 7092 ஆம் இலக்கத்தில் அளந்து தயாரிக்கப்பட்ட நில அளவைப் படத்தின் படி இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு இலா 4 குளி 5.06. இதில் துண்டு 2 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 2 இதற்கு எல்லைகள்

கிழக்கு :- கனகேந்திரனுக்குரிய ஆதனம்
வடக்கு :- கொழும்புத்துறை வீதி
மேற்கு :- மீதி ஆதனம்
தெற்கு :- மாணிக்கம் கந்தையாவின் ஆதனம் இதனடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை கணபதிப்பிள்ளை பரஞ்சோதிநாதன் மற்றும் பெண் கலைமகள் என்பவர்கள் தமது பெயரை எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கணபதிப்பதிள்ளை பரஞ்சோதிநாதன் மற்றும் பெண் கலைமகள் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர், மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-3903)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சட்டவிரோத செயற்பாடுகளுக்கு
# முடிவு கட்டுவோம்
## அமைச்சர் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)

**யாழ். பருத்தித்துறை, கற்கோவளம் பகுதியில் இடம்பெறும் மணல் அகழ்வு, வாள்வெட்டுத் தாக்குதல் மற்றும் அனைத்து சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் முடிவு கட்டப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் உறுதியளித்துள்ளார்.**

அமைச்சர் சந்திரசேகர், உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகள் சகிதம் கற்கோவளம் பகுதிக்கு நேற்று சென்றிருந்தார்.

குறித்த பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும் கும்பலால் மீன்வாடிகள் அடித்து நொறுக்கப்பட்டு தீவைக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலும், மீனவர்கள் மீதான வாள்வெட்டு தாக்குதல் பற்றியும் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே இது பற்றி ஆராய்ந்து, உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக அதிகாரிகள் சகிதம் அமைச்சர் அங்கு விரைந்திருந்தார்.

மீனவர்கள் மற்றும் மக்களிடம் கலந்துரையாடி, நடந்தவற்றை கேட்டறிந்து - அவை பற்றி பொலிஸாரிடம் எடுத்துரைத்தார். பொலிஸாரால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் பற்றியும் அதிகாரிகள் ஊடாகவே மக்களுக்கு அமைச்சர் தெளிவுபடுத்த வைத்தார்.

அத்துடன், சட்டவிரோத போதைப்பொருள் பாவனை மற்றும் வாள்வெட்டு தாக்குதல் சம்பவங்கள் என்பவற்றுக்கு நிச்சயம் முடிவு கட்டப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.

சட்டத்தின் பிடிக்குள் இருந்து தவறிழைத்தவர்கள் தப்பவே முடியாது எனவும் அமைச்சர் மக்களிடம் குறிப்பிட்டார்.

அத்துடன் மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு பாதிப்பு ஏற்பட இடமளிக்க முடியாது எனவும் தெரிவித்தார். (8)

# டெங்கு விழிப்புணர்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலி வடக்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நேற்று புதன்கிழமை டெங்கு விழிப்புணர்வு நடைபவனி நடைபெற்றது.

மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் ஆரம்பித்து, காங்கேசன்துறை வீதியூடாக துண்டுப் பிரசுரங்கள் வழங்கி யாழ்.காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி வரை நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நடைபவனியில் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பரா. நந்தகுமார் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் அதிகாரிகள் பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (8-33)

# மகோற்சவம்


(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான 39 ஆவது வருடாந்த நாராயண மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் இரண்டாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று மாலை கொடியிறக்கத்துடன் மகோற்சவம் நிறைவு பெறும். (8-33)

# தியாக தீபம் திலீபனின் 3 ஆம் நாள் நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)



தியாக தீபம் திலீபனின் 3 ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில் சுடரேற்றி திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூபி அஞ்சலி செலுத்தப்பட்டது

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து, 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15 ஆம் திகதி உணவையும், நீரையும் தவிர்த்து தியாக தீபம் திலீபன் உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுத்தார்.

அவரின் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாத நிலையில் 12ஆவது நாளான 26ஆம் திகதி முற்பகல் 10.48 மணிக்கு தியாக தீபம் உயிர் நீத்தார். (8-33)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை மாவட்ட/நீதிவான் நீதிமன்ற வழக்கில் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோ வாகனங்கள், ஆடைகள் (சாறி, சல்வார்), கையடக்கத் தொலைபேசிகள், GPS, வெளியிணைப்பு இயந்திரம், படகு மற்றும் இதர பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 20.09. 2025 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த பகிரங்க ஏல விற்பனையில் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏலத்தில் பொருட்களை கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்க வேண்டும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள யாழ்நகர் 1 பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர்நோய் தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறும் அத்துடன் ஓர் நாய்க்கான உரிமக் கட்டணமாக 100 ரூபாய் அறவிடப்படும் என யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.(8)

| திகதி | நேரம் | தடுப்புமருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 18.09.2025 | மு.ப 9.00 - மு.ப 11.00 | முத்தமிழ் வீதி பாலர் பாடசாலை |
| | மு.ப 11.00 - பி.ப 01.00 | மீனாட்சி அம்மன் கோவிலடி |
| | பி.ப 02.30 - பி.ப 04.00 | நமசிவாயம் பாடசாலை முன்பாக |
| 19.09.2025 | மு.ப 9.00 - மு.ப 11.00 | கூழாவடி வைரவர் கோவிலடி |
| | மு.ப 11.00 - பி.ப 01.00 | சிறாம்பியடி சனசமூக நிலையம் |
| | பி.ப 02.30 - பி.ப 04.00 | பலாலி வீதி 2 ஆம் ஒழுங்கை |
| 22.09.2025 | மு.ப 9.00 - மு.ப 11.00 | யாழ் வீதி |
| | மு.ப 11.00 - பி.ப 01.00 | பெருமாள் கோவிலடி |
| | பி.ப 02.30 - பி.ப 04.00 | கன்னாதிட்டி காளி கோவிலடி |
| 23.09.2025 | மு.ப 9.00 - மு.ப 11.00 | சிவன் வடக்கு வீதி பாலர் பாடசாலை |
| | மு.ப 11.00 - பி.ப 01.00 | கீரிப்பிள்ளையார் கோவிலடி |
| | பி.ப 02.30 - பி.ப 04.00 | மாவடி வீதி |
| 24.09.2025 | மு.ப 9.00 - மு.ப 11.00 | பிரப்பங்குளம் வீதி |
| | மு.ப 11.00 - பி.ப 01.00 | B.A. தம்பி லேன் |
| | பி.ப 02.30 - பி.ப 04.00 | கின்னர் வீதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக்கூட்டம்

(அராலி)

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9 மணிக்கு கட்டுடை பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறும். அத்துடன் கூட்டத்தில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவுள்ளதாக விவசாய சம்மேளனத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (8-104)

# மூன்று சக்கர சைக்கிள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

ஜேர்மனியில் வசிக்கும் ஜெயமாறன் லோஜினி தம்பதிகள் தங்களின் 24 ஆவது திருமண நாளை முன்னிட்டு இறுதி யுத்தத்தில் தனது கால்களை இழந்த ஒருவருக்கு மூன்று சக்கர சைக்கிள் ஒன்றை கனகசெல்வா அறக்கட்டளை மன்றத்தின் ஊடாக வழங்கி வைத்தனர். (8)

# தொடருந்துகளில் வர்த்தக நடவடிக்கை; ஈடுபடுவோர் மீது இறுக்கமாகும் சட்டம்

**(கொழும்பு) ...........................**

**தொடருந்துகளில் வர்த்தகங்களில் ஈடுபடுபவர்கள் மீது சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த தொடருந்து பாதுகாப்பு அத்தியட்சகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.**

தொடருந்து பயணிகளிடம் இருந்து வரும் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதையடுத்து, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கை வர்த்தகர்களின் வாழ்வாதாரத்தை கடுமையாக பாதிக்கும் என்று இலங்கை நடமாடும் தொடருந்து வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. வர்த்தகம் என்ற பெயரில் திருட்டுகள் இடம்பெறுவதாக பயணிகளிடமிருந்து முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, 1902ஆம் ஆண்டு தொடருந்துக் கட்டளைச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டங்களின் கீழ், தொடருந்து பயணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொள்ளும் வியாபாரிகள் மீது சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஙி)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

**தொடர்புகளுக்கு-076 682 7368**
**No.189, Main Street Jaffna.**
**யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்**
**(முன்பதிவு செய்து வரவும்)**

(5416)


## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்- 10, அராலி வீதி, 42/87 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம், இல-92, முதலாம் குறுக்குத் தெரு, சோனகத் தெரு, யாழ்ப்பாணத்தை முன்னைய முகவரியாகவும் "A"முகாம், மதுரங்குளி, புத்தளத்தை தற்போதய முகவரியாகவும் கொண்ட மொகமட் தாஹா கியாஸ் என்பவர் 2004.04.22 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் 672 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் குறித்த ஆதனம் 1987 இல் தன்னால் கொள்வனவு செய்யப்பட்டு நொத்தாரிசு ஜனாப் M.M.மன்சூர் முகதாவில் சாதனம் ஒன்று நிறைவேற்றப்பட்டதாகவும் அக் காலப்பகுதியில் முஸ்லீம் சமூகத்தினர் பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்றும் காணிப்பதிவகத்தில் தேடுதல் செய்தும் அது தொடர்பான ஆவணங்கள் கிடைக்கவில்லை எனவும் குறிப்பிட்டு குறித்த ஆதனத்திற்கு தானே சொந்தக்காரர் எனவும் தனது ஆட்சிக்குட்பட்டது என்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை, மொகமட் தாஹா கியாஸ் 2005.01.16 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் 867 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், புதிய சோனகத் தெரு முதலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த கந்தையா வடிவேலுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை, கந்தையா வடிவேலுவும் மனைவி ரஜனியும் 2005.01.16 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் 868 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், புதிய சோனகத் தெரு இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த வீரசிங்கம் நிசாந்தகுமாருக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை, வீரசிங்கம் நிசாந்தகுமாரும் பெண் அஞ்சனாவும் 30.01.2020 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 11798 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், ஓட்டுமடம் அராலி வீதி, இல.42/86 ஐச் சேர்ந்த தம்பு மயூரனுக்கு வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**


வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, யாழ்ப்பாணம் மாநகர சபை, யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு.J/88, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "முதலியார்களனியும் கள்ளியடியும்" விஸ்தீரணம் நெற்.பரப்பு (1) ஒன்றும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும், இதற்கு எல்லைகள்:-

கிழக்கு - கந்தசாமி மாயாகரனுக்கும் பெண் சுகந்திக்கும் உரிய ஆதனம்.
வடக்கு - ஒழுங்கை.
மேற்கு - சுரேஸ்குமார் பெண் நாகலோஜினிக்குரிய ஆதனம்.
தெற்கு - கந்தையா வடிவேலுவின் உரிமைக்காரரின் ஆதனம் இதடங்கலும்.

தற்போது தம்பு மயூரன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது தம்பு மயூரன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**மாநகர முதல்வர், யாழ் மாநகர சபை.** (C-3902)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.**ஞா.கெனத் மேரியான்**
(Spe.Trd.com,B.A,Dip. in.Edu) SLPS-I

எமது பாடசாலையில் அதிபராக கடமையாற்றி வரும் மதிப்பிற்குரிய திரு.**ஞா.கெனத் மேரியான்** அவர்கள்
**இலங்கை அதிபர் சேவை தரம் 1 இற்கு**
03.10.2018 ஆம் திகதி முதல் தரமுயர்த்தப்பட்டமையையிட்டு எமது பாடசாலை சமூகம் சார்பாக வாழ்த்தி நிற்கின்றோம். (C-3904)

வாழ்த்துவோர்–
ஆசிரியர்கள், மாணவர்கள் கல்விசாரா ஊழியர்கள்.
யா/சென் மேரீஸ் வித்தியாலயம்

## மணிவிழா வாழ்த்துக்கள்



திருமதி. **ஆதிரை சர்வேந்திரன்**
(B.A, Dip in Education, SLTS-I)

**சேவை விபரம்**
- நிர்வாக உதவியாளர்– யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி 12.09.1994 - 31.03.1997
- ஆசிரியர்– யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி 01.04.1997 - 14.02.2010
- யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் 15.02.2010 - 22.04.2018
- யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை 23.04.2018 - 18.09.2025

ஆசிரியப் பணியில் 28 வருடங்களில் எமது பாடசாலையில் 07 வருடங்களாக ஆசிரியராக சேவையாற்றி ஓய்வு பெறும் திருமதி. ஆதிரை சர்வேந்திரன் ஆசிரியைக்கு இனிய மணிவிழா வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வு காலத்தில் உடல் உள ஆரோக்கியத்துடன் மனமகிழ்ச்சியோடு என்றும் இன்பமாய் வாழ வாழ்த்துவதுடன் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes

(1561)

வாழ்த்துவோர்– ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கனமழையால் உத்தரகண்டில் 15 பேர் உயிரிழப்பு

### பல பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை



(டில்லி)

உத்தரகண்ட் முழுவதும் நேற்று முன்தினம் இடைவிடாத மழை பெய்ததால், உண்டான வெள்ளம் மற்றும் மண்சரிவுகளினால் மொத்தம் 15 பேர் உயிரிழந்தனர்.டேராடூனில் மாத்திரம் குறைந்தது 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

செப்ரெடம்பர் 20 ஆம் திகதிவரை பலத்த மழைபெய்யும் என்றும் வானிலை எச்சரிக்கை மையம் அறிவுறுத்தியுள்ளதுடன், டேராடூன், சம்பாவத் மற்றும் உதம் சிங் நகர் ஆகிய பகுதிகளுக்கு மாநில அரசு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கனமழையின் தாக்கம் டேராடூனில் அதிகமாகப் பதிவாகியுள்ளது.

அங்கு வீதிகள் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன, வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் சேதமடைந்தன. இரண்டு பெரிய பாலங்கள் இடிந்து விழுந்தன. இதனால் முக்கிய வழித்தடங்களினூடான போக்குவரத்து துண்டிக்கப்பட்டன.

பெரிய அளவிலான மின் தடைகளும் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சஹஸ்த் ரதாரா, முசோரி, பிரேம் நகர், நரேந்திர நகர் (தெஹ்ரி), பித்தோராகர், நைனிடால் மற்றும் பவுரி உள்ளிட்ட பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து 900 இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளதாக மாநில பேரிடர் மேலாண்மை செயலாளர் வினோத்குமார் சுமன் குறிப்பிட்டுள்ளார். (நி)

## மனித குலத்திற்கு எதிரா...

## காசாவில் அரங்...

### இஸ்ரேலை குற்றம் சாட்டி அறிக்கை

**(ஜெனீவா)**

**ஐக்கிய நாடுகள் சபையின் சுயாதீன விசாரணை ஆணையம், இஸ்ரேல் காசாவில் இனப்படுகொலை செய்ததாகக் குற்றம் சாட்டி பரபரப்பான அறிக்கையை வெளியிட்டுள்ளது.**

2023 ஆம் ஆண்டு போர் தொடங்கியதிலிருந்து இஸ்ரேலியப் படைகள் காசாவில் பாலஸ்தீனியர்களுக்கு எதிராக இனப்படுகொலை செய்ததற்கான வலுவான ஆதாரங்கள் இருப்பதாக அறிக்கை கூறுகிறது.

இந்தப் போரில் இஸ்ரேல் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களைச் செய்ததாக ஆணையம் குற்றம் சாட்டியுள்ளது.

சர்வதேச சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட ஐந்து இனப்படுகொலைச் செயல்களில் நான்கை இஸ்ரேல் செய்ததாக ஆணையம் தனது 72 பக்க அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஒரு இனக்குழுவினரை குறிவைத்து கொல்வது, அவர்களுக்கு கடுமையான உடல் மற்றும் மன ரீதியான தீங்கு விளைவிப்பது, அந்த இனக் குழுவினருக்கு வேண்டு

## மோடிக்கு பிறந்தநாள் பரிசு அனுப்பிய மெஸ்ஸி




(டில்லி)

பிரதமர் மோடி பிறந்த நாளுக்கு மெஸ்ஸி சிறப்பு பரிசு அனுப்பியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தன்னுடைய 75ஆவது பிறந்தநாளை நேற்றுக் கொண்டாடிய நிலையில் உலகப் புகழ்பெற்ற கால்பந்து ஜாம்பவானும், அர்ஜெண்டினா அணியின் கப்டனுமான லியோனல் மெஸ்ஸி, பிரதமர் மோடிக்கு பிறந்தநாள் பரிசு அனுப்பியுள்ளார்.

2022ஆம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் கோப்பையை வென்றபோது தான் அணிந்திருந்த அர்ஜெண்டினா அணியின் ஜெர்சியில் கையெழுத்திட்டு பிரதமர் மோடிக்கு அனுப்பியுள்ளார்.

லியோனல் மெஸ்ஸி இந்த ஆண்டு இறுதியில் டிசம்பர் 13 ஆம்திகதி முதல் 15ஆம் திகதிவரை இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யவுள்ளார். தொடர்ந்து டிசம்பர் 15ஆம் திகதி டில்லிக்கு செல்லும் மெஸ்ஸி, பிரதமர் மோடியையும் சந்திக்கவுள்ளார். இதற்கிடையில், தங்கள் மாநிலத்துக்கும் வரும்படி மெஸ்ஸிக்கு கேரள முதல்வர் பினராயி விஜயன் அழைப்பு விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (நி)


## சீனா - பிலிப்பைன்ஸ் கப்பல்கள் மோதிக்கொண்டதால் பதற்றம்

(பீஜிங்)

தென்சீனக் கடல் பகுதியில் உள்ள சர்ச்சைக்குரிய பவள தீவான, "ஸ்கார்பரோ ஷோல்" அருகே சீனா மற்றும் பிலிப்பைன்ஸ் கப்பல்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதால், பதற்றம் அதிகரித்துள்ளது.

தென்சீனக் கடல் பகுதியில் உள்ள ஸ்கார்பரோ ஷோல் தீவு வளமான மீன்பிடி தளமாகும். இது பிலிப்பைன்ஸின் முக்கிய தீவான லுசோனுக்கு மேற்கே 220 கி.மீ தொலைவிலும், ஹாங்காங்கிலிருந்து தென் கிழக்கே 880 கி.மீ தொலைவிலும் உள்ளது.

இத்தீவுக்கான உரிமம் தொடர்பாக, சீனா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடான பிலிப்பைன்ஸ் இடையே அடிக்கடி மோதல் நிலவி வருகிறது.



அண்மையில் சீனா ஸ்கார்பரோ ஷோலின் ஒரு பகுதியை தேசிய இயற்கை இருப்புப் பகுதியாக அறிவித்தது. இதற்கு பிலிப்பைன்ஸ் கடும் கண்டனத்தை தெரிவித்திருந்தது.

மேலும், இத்தகைய அறிவிப்பு தங்கள் உரிமைகள் மற்றும் அதிகார வரம்பை மீறுவதாக கூறி, சீனாவிற்கு தன் எதிர்ப்பை தெரிவித்தது.

இந்நிலையில், ஸ்கார்பரோ ஷோல் பகுதி அருகே, சீனக் கடலோரக் காவல்படை கப்பலும், பிலிப்பைன்ஸ் கப்பல் ஒன்றும் மோதிக்கொண்டன.

ஆனால், வேண்டுமென்றே பிலிப்பைன்ஸ் கப்பல் ஒன்று தங்கள் கப்பலுடன் மோதியதாக சீனா குற்றஞ்சாட்டியுள்ளது. இதனால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ான குற்றங்கள் ...ங்கேற்றம்!

### ...கை வெளியிட்டது ஐ.நா

மென்றே அழிவுக்கான சூழ்நிலைகளை உருவாக்குவது மற்றும் பிறப்புகளைத் தடுப்பது ஆகியவை இதில் அடங்கும்.

இஸ்ரேலியத் தலைவர்களின் கருத்துகளும் இராணுவத்தின் செயல்களும் அவர்களின் இனப்படுகொலை நோக்கத்திற்கான சான்றுகள் என்று ஆணையம் தெரிவித்துள்ளது. வழக்கம் போல இஸ்ரேல் இந்த அறிக்கையை நிராகரித்துள்ளது. (நி)



## இந்தியத் துணை தூதரகத்தை முற்றுகையிடுவோம்

### கனடாவில் காலிஸ்தான் பயங்கரவாதிகள் மிரட்டல்

(ஒட்டாவா)

கனடாவில் உள்ள இந்திய துணை தூதரகத்தை செப்.18ஆம் திகதி முற்றுகையிட போவதாக காலிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

அமெரிக்காவை தளமாக கொண்ட காலிஸ்தானி ஆதரவு பயங்கரவாத அமைப்பு இந்த அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறது. இன்று கனடா வான்கூவரில் உள்ள இந்தியத் துணை தூதரகத்தை முற்றுகையிட்டு 12 மணி நேரம் போராட்டம் நடத்தபோவதாக கூறி உள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது, 2023 ஆம் ஆண்டு ஹர்தீப்சிங் நிஜார் படுகொலையில் இந்தியர்களின் பங்கு குறித்து விசாரணை நடத்தப்படுவதாக கனடா பிரதமர் ட்ரூடோ பாராளுமன்றத்தில் அறிவித்தார்.




2 ஆண்டுகள் கடந்தும் காலிஸ்தான் இயக்கத்தினரை குறிவைத்து உளவு அமைப்புகள் செயற்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் ஊடே, புதிய கமிஷனர் தினேஷ் பட்நாயக் முகத்தை காட்டும் படத்தை போட்டு அதை குறிவைப்பது போன்று போட்டோ ஒன்று சித்தரிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் முந்தைய பிரதமர் ஜஸ்டின் இருந்த போது காலிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வந்தார். இதனால் இந்தியா- கனடா உறவு சீர்கெட்டது. ஜஸ்டின் பதவி விலகி புதிய அரசு பொறுப்பேற்றுள்ள நிலையில், மீண்டும் காலிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் வாலாட்ட தொடங்கியுள்ளனர். (நி)

## புதுமையான நாடுகளின் பட்டியலில் முதல்முறையாக நுழைந்த சீனா

(பெர்லின்)


ஐ.நா வின் மிகவும் புதுமையான நாடுகளின் பட்டியலில் முதல் 10 இடங்களில் ஜேர்மனியை பின்னுக்கு தள்ளி, சீனா முதல்முறையாக நுழைந்துள்ளது.

உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பான டபிள்யு.ஐ.பி.ஓ, உலகளாவிய புத்தாக்க குறியீடு எனும் ஜி.ஐ.ஐ கணக்கெடுப்பின்படி, மொத்தம் 78 குறியீடுகளின் அடிப்படையில் 139 நாடுகளின் பொருளாதார நிலையை மதிப்பீடு செய்து, இந்தப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

சீனா ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் அதிக முதலீடுகளை செய்திருப்பதன் காரணமாக, இந்த முன்னேற்றத்தை அடைந் துள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த 2011 முதல் ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்து தொடர்ந்து முதல் இடத்தில் இருந்து வருகிறது. இதற்கு அடுத்தடுத்த இடங்களில் சுவீடன், அமெரிக்கா உள்ளன.

இவற்றைத் தொடர்ந்து தென் கொரியா, சிங்கப்பூர், பிரிட் டன், பின்லாந்து, நெதர் லாந்து, டென்மார்க், சீனா அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. (நி)



## இங்கிலாந்து சென்றடைந்தார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது வரலாற்று சிறப்புமிக்க இரண்டாவது அரசு பயணமாக நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இங்கிலாந்து சென்றடைந்தார்.

அரச கொண்டாட்டங்கள், வர்த்தக பேச்சுவார்த்தைகள் மற்றும் சர்வதேச அரசியல் ஆகியவற்றின் கலவையாக இந்த விஜயம் அமைகிறது.

செவ்வாய்க்கிழமை மாலை அமெரிக்க ஜனாதிபதி லண்டன் ஸ்டான்ஸ்டெட் விமான நிலையத்தில் தரையிறங்கினார்.

அங்கு அவர் விமானத்தில் இருந்து இறங்கும் போது, அவரை இங்கிலாந்தின் புதிய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் உள்ளிட்டோர் வரவேற்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி மனிதப்புதைகுழி;

## சுயாதீன விசாரணை அவசியம்

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்

**(கொழும்பு)**

**யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் சர்வதேச மட்டத்தில் அக்கறை அதிகரித்து வரும் நிலையில் சுயாதீன விசாரணை அவசியம் என அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் சம்மர் லீயும் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் கருத்து வெளியிட்டுள்ளார்.**

அவரது பதிவில், செம்மணி மனிதப் புதைகுழியில் 140 இற்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் மட்டுமன்றி, குழந்தையின் பால்போத்தல், பாடசாலை புத்தகப்பை, சிறுவர்கள் விளையாடும் பொம்மைகள் உள்ளிட்ட பொருட்கள் மீட்கப்பட்டிருப்பது கவலைக்குரிய விடயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற கண்டுபிடிப்புகள் பாதிக்கப்பட்டவர்களின் நீதி கோரிக்கைகளை வலுப்படுத்துவதாகவும், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் உறுதிசெய்யப்பட வேண்டிய அவசியம் உள்ளது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இதற்கு முன்னர் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களான ராஜா கிருஷ்ணமூர்த்தி மற்றும் டெபோரா ரோஸ் ஆகியோரும் தமது எக்ஸ் தளப் பதிவுகள் ஊடாக செம்மணி சம்பவம் குறித்து ஆழ்ந்த அக்கறையை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்தநிலையில், சம்மர் லீ தமது பதிவில், "நாம் தொடர்ந்து சுயாதீன விசாரணையை வலியுறுத்த வேண்டும். அதுவே நீதி நோக்கி நகரும் பாதை" எனக் குறிப்பிட்டுள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1995- இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி-பா- 0<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: BSc,PHI<br>எதிர்பார்ப்பு: Graduate(BSc)<br>தொ.இ: B/16049 | பிறப்பு-1992-இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி-பா-11<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: B ed,Teacher<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/16075 |
| பிறப்பு:1995-இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>12 இல் செவ்<br>கி-பா-37<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்-London<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/16052 | பிறப்பு-1993-இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி-பா-45<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA,Accountant<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/16076 |
| பிறப்பு:1998-இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>7 இல் செவ்<br>கி-பா-52<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்:London<br>எதிர்பார்ப்பு:only London<br>தொ.இ: B/16053 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்-உத்தரட்டாதி<br>கி-பா-31 1/4<br>உயரம்-5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி.MA<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/16077 |
| பிறப்பு: 1984- இந்து<br>நட்சத்திரம்:ரோகினி<br>2 இல் செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: Bsc,Pricinple<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/16054 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்:சித்திரை<br>12 இல் செவ்<br>உயரம்: 5'0"<br>தகைமை/தொழில் -HNDM<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16081 |
| பிறப்பு: 1990- இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி-பா- 6 1/4<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: Bsc,Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16056 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் -Software Engineer,Master(London)<br>எதிர்பார்ப்பு: படித்தவர்<br>தொ.இ: G/16083 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 446

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# இல்லத்தரசிகள்!

ஒருவர் மிகவும் பெருமையாக சொன்னார். என்னுடைய இல்வாழ்க்கையிலே என் மனைவியோடு ஒரு தடவைதான் சண்டை போட்டிருக்கின்றேன் என்றார். எப்போது என்று கேட்டேன். கல்யாணத்திற்கு மறுநாள் என்றார். அதன்பின் சண்டையே வரவில்லையா? என்றேன். இல்லை என்றார்.

அது எப்படி? என்றேன். அப்போது ஆரம்பித்த அந்த முதல் சண்டையே இன்னும் முடியவில்லையே என்றார். எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. என்னைச் சிரிக்க வைப்பதற்காக அவர் அப்படிச் சொல்கின்றாரே? அவர் உண்மையிலேயே இல்வாழ்க்கையை மிகவும் சிறப்பாக நடத்திக் கொண்டுவருகின்ற ஒருவர்தான் அவர்.

ஒரு குடும்பம் நன்றாக இருக்கிறது என்றால் அதற்கு இல்லத்தரசிகள் தான் காரணம். இயற்கையாகவே பெண்களுக்கு என்று சில சிறப்பான குணங்கள் உண்டு.

ஒரு தடவை பவேரிய நாட்டு அதிபருக்கும் ஜேர்மன் சக்கரவர்த்திக்கும் தகராறு வந்தது. ஜேர்மன் சக்கரவர்த்தி என்ன செய்தார் என்றால் ஒரு பெரிய படையைத் திரட்டிக் கொண்டுபோய் பவேரியவின் தலைநகரை சுற்றிவளைத்து விட்டார்.

ஆனாலும் அவருக்குக் கோபம் அடங்கவில்லை. பவேரிய தலைநகரை தரைமட்டமாக்கவேண்டும் என்று தீர்மானித்தார். இந்த சமயத்திலே அவர் மனதிலே ஒரு ஓரமாக கொஞ்சம் இரக்கம் தலைகாட்டியது. உடனே ஒரு அறிவிப்பு கொடுத்தார்.

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் மட்டும் விதிவிலக்கு அளிக்கிறேன். அவரவர்கள் முதுகிலே சுமக்கக்கூடிய அளவு பொருட்களை எடுத்துக் கொண்டு வெளியேறலாம்! என்று அறிவித்தார்.

அதன்பின் அவருடைய படைத்தலைவர்களைக் கூப்பிட்டார். பெண்களெல்லாம் ஊரைவிட்டு வெளியேறியவுடனே தலைநகரைக் கொளுத்திவிடுங்கள் என்று உத்தரவு போட்டார். சிறிது நேரத்திலே பவேரிய நாட்டுப் பெண்கள் எல்லாம் ஒவ்வொருத்தராக தட்டுத்தடுமாறி வெளியே வந்துகொண்டிருந்தார்கள்.

சக்ரவர்த்தி பார்க்கிறார். அவருக்கு அதிர்ச்சி! என்ன நடந்தது தெரியுமா? பவேரிய பெண்கள் முதுகிலே சுமந்து வந்தது, வீட்டுப் பொருட்களை அல்ல வீட்டுக்காரரை! ஆமாம். அவர்கள் தங்களுடைய கணவன்மார்களை முதுகிலே சுமந்து வந்து கொண்டிருந்தார்கள். கடைசியாக பார்த்தால் பவேரிய மன்னனை அவனுடைய ராணி சுமந்துகொண்டு தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்தார்.

ஜேர்மன் சக்ரவர்த்தி இதைப் பார்த்தார். அவர் மனது நெகிழ்ந்தது. பவேரியவுக்கு மன்னிப்பு கொடுத்துவிட்டு படைகளை அழைத்துக் கொண்டு திரும்பி வந்துட்டார். இதுதான் மனைவியின் பெருமை.

இருந்தாலும் இந்தக் காலத்திலேயெல்லாம் அந்த அளவுக்கு நடக்குமா என்பது சந்தேகம்தான்.

அது மாதிரி ஒரு நிலைமை இப்போது வந்து, உங்களாலே முடிந்த அளவுக்கு முதுகிலே சுமந்துகொண்டு போங்கள் என்று சொன்னால், பல பேர் தொலைக்காட்சிப் பெட்டியைத் தான் சுமந்துகொண்டு போவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

அண்மையிலே மெக்சிகோவிலே குடும்பத்தலைவிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரு போராட்டம் நடத்தினார்களாம். பத்திரிகையிலே பார்த்தேன்.

அது என்ன போராட்டம் என்றால். ஒரு நாள் வீட்டு வேலையை அடியோடு நிறுத்திவிட்டார்களாம்! அவர்களின் கணவன்மார்களை சமையல் வேலை உட்பட சகல வேலைகளையும் அன்றைக்கு செய்ய வைத்து அதைப் பார்த்து சந்தோஷப்பட்டார்களாம்!

எதற்காக இப்படி செய்கின்றீர்கள் என்று கேட்டால் வீட்டு வேலை என்பது குடும்பத்திற்கு மட்டுமல்ல சமுதாயம் முழுவதற்கும் மிகவும் முக்கியமானது என்பதை உணர்த்துவதற்காகத்தான் இந்தப் போராட்டம் என்று சொன்னார்களாம். மெக்சிகோ நகராட்சியின் பெண்கள் சம உரிமை இயக்கம் தான் இந்தக் கிளர்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்திருந்தது.

நம்முடைய ஊர்களிலேயெல்லாம் அந்த அளவுக்குப் போராட்டமே அவசியமில்லை. ஏனென்றால் ஏற்கனவே பல பேர் வீட்டு வேலைகளையெல்லாம் பொறுப்பாகவே செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஒரு அம்மா தன்னுடைய கணவர் மீது மிகவும் குறைகூறிக் கொண்டிருந்தார்கள். எப்போது பார்த்தாலும் நீங்கள் என் வீடு, என் பங்களா, என்னுடைய கார், என்னுடைய தோட்டம் இப்படியே தான் சொல்கின்றீர்கள் எதையாவது நம்முடையது என்று சொன்னதுண்டா? என்றார்கள்.

கணவர் பார்த்தார். சரி சொல்கிறேன். நம்முடைய வேட்டி எங்கே, எடுத்து வா!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுச்சீட்டு பெறுவது தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தால் வெளியிடப்பட்ட நடைமுறைகள்

வடமாகாணத்தில் கடவுச்சீட்டு (Passport)வழங்கும் பிராந்திய அலுவலகங்கள்
யாழ்ப்பாணத்தில் - மாவட்ட செயலகத்திலும்
வவுனியாவில் - வவுனியா மன்னார் வீதியில் சிங்கள மகாவித்தியாலயத்திற்கு முன்னாலும் அமைந்துள்ளது.

- **சேவைகள்**
  - கடவுச்சீட்டு விநியோகித்தல் (ஒருநாள் சேவை. சாதாரண சேவை)
  - கடவுச்சீட்டுக்களில் திருத்தங்கள் மேற்கொள்ளல்.
  - 2018 இன் பின்னர் 15 வயதிற்கு மேற்பட்டோரால் வெளிநாட்டு தூதரகங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டுக்கான விரலடையாளத்தை பதிவு செய்தல். (Finger Print)
- **நடைமுறைகள்**
  - காலை 7.00 மணி தொடக்கம் நண்பகல் 2.00 மணி வரை ஒருநாள் மற்றும் சாதாரண சேவைக்கான விண்ணப்பங்களை ஏற்கும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.
  - எந்தவிதமான முற்பதிவுகளும் தேவையில்லை.
- **தேவையான - ஆவணங்கள்**

1) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம்
2) பிறப்பு அத்தாட்சி பத்திரம் (அசல் - Original) தெளிவானதாக இருத்தல் வேண்டும்.
3) புகைப்படம் (Online Photo)- (பாஸ்போட் அலுவலகத்திற்கு உள்ளே போக முதலே அங்கீகரிக்கப்பட்ட ஸ்ரூடியோவில் புகைப்படம் எடுக்கலாம்)
4) தேசிய அடையாள அட்டையும் அதன் பிரதியும் ( தங்கள் தற்போதய தோற்றத்துடன் அடையாள அட்டையிலுள்ள புகைப்படம் ஒத்துப்போகவில்லை என்றால் அடையாள அட்டையை புதுப்பித்து கொண்டு செல்லுங்கள் )
5) ஏற்கனவே கடவுச்சீட்டு இருந்தால் அதனையும் அதன் பிரதியையும் கொண்டு செல்லுங்கள்.
6) திருமணமான பெண்கள் கணவனின் பெயரில் கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள விரும்பின் திருமண சான்றிதழை (Original) கொண்டு செல்லுங்கள்.
7) சான்றிதழ்களின் ஆங்கில மொழி பெயர்ப்புத் தேவையில்லை.
8) பதினைந்து வயதுக்கு உட்பட்ட பிள்ளையின் கடவுச்சீட்டு புதுப்பிப்பதாயின் தாய், தந்தை இருவரும் கட்டாயம் நேரில் செல்ல வேண்டும். தாய் தந்தை இருவரினதும் சம்மத கடிதம் (concern letter) மற்றும் தேசிய அடையாள அட்டை பிரதி இணைக்கப்பட வேண்டும்.

குறிப்பு :
பெற்றோரில் ஒருவர் வெளிநாட்டில் இருந்தால் வெளிநாட்டு தூதரகத்தில் சம்மதம் தெரிவித்து கடிதம் மற்றும் சான்றுப்படுத்திய கடவுச்சீட்டு பிரதியினையும் பெற்று அதனை இணைக்க வேண்டும் (No Objection Letter)
பெற்றோரில் ஒருவர் மரணமடைந்து இருந்தால் மரண சான்றிதழ் கொண்டு செல்ல வேண்டும்.
பெற்றோர் விவாகரத்து பெற்றிருந்தால் நீதிமன்ற கட்டளை அவசியமானது. பிள்ளையின் கட்டுக்காவல் பராமரிப்பு எந்த பெற்றோரிடம் உள்ளதோ அவரே பிள்ளையின் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்க முடியும்.
9)கடவுச்சீட்டு தொலைந்திருந்தால் பொலிஸ் முறைப்பாட்டு பிரதி அவசியமானது.

- **கட்டணங்கள்**

ஒருநாள் சேவை -20.000.00
சாதாரண சேவை- 10.000.00
திருத்தங்கள் - 1200.00
தொலைந்த கடவுச்சீட்டு எனின் தண்டப்பண விபரம்:
வழங்கப்பட்டு ஒரு வருடத்திற்கு உட்பட்டது -20.000.00
வழங்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்டது-15.000.00
விண்ணப்பப்படிவங்கள் பெற்றுக்கொள்ள :
http://www.immigration.gov.lk/pages_e.php?id=24

## கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)
523 ஆவது படைப்பிரிவின் ஒருங்கிணைப்பில் யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைத்தளபதி மேஜர் ஜெனரல் ரகித குமார தலைமையில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

ரி.எம். இன்டர் நேஷனல் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநரின் நிதி ஒதுக்கீட்டில் 5 மில்லியன் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 150 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 100 | 150 | 160 |
| தக்காளி | 280 | 250 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 200 |
| கோவா | 250 | 250 | 280 |
| கரட் | 200 | 300 | 350 |
| பூசணி | 60 | 50 | 50 |
| புடோல் | 150 | 150 | 240 |
| வாழைக்காய் | 150 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 160 |
| பாகற்காய் | 400 | 400 | 450 |
| வெண்டக்காய் | 150 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 250 | 350 |
| பயற்றங்காய் | 300 | 300 | 300 |
| லீக்ஸ் | 250 | 300 | 200 |
| பீற்றூட் | 100 | 200 | 150 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 400 |
| போஞ்சி | 600 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 300 | 120 |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 100 |
| தேசிக்காய் | 1200 | 600 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 150 | 160-220 |
| இராசவள்ளி | 800 | 600 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 400 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 150 | 60 |
| வல்லாரை | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | 100 | 120 |


# இராசிபலன்

18.09.2025,
புரட்டாதி 02 , வியாழக்கிழமை
துவாதசி பின்னிரவு 1.17 மணிவரை

பூசம் முற்பகல் 9.31 மணிவரை
சுபநேரம் 7.33 - 9.03 மணிவரை
இராகுகாலம் 1.33 - 3.03 மணிவரை
அமிர்தசித்தம்,சந்நியஸ்தமகாளயம்

சந்திராஷ்டமம்-
பூராடம்.

வளவன்





தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்கமுற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும்.





தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நீங்கள் பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிக்கும் நாள்.





எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், ஆற்றல்மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.




சொந்தபந்தங்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, பேச்சில் கனிவு பிறக்கும்.





நீண்ட நாளைய பிணக்குகளில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, மற்றவர்கள் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள்.




திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.




எதிர்பார்த்த காரியமொன்று இன்று காலையிலேயே நடைபெற்று மகிழ்ச்சியைத் தரும், வருமானம் எதிர்பார்த்த படி வந்து சேரலாம்.




ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட் சேர்க்கையுண்டு,உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டுகொள்வீர்கள்.




உறவினர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும், பொன்னான நாள்.




திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள்.




ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.




அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

முதுமை; உணர்வைப் பொறுத்தது; வயதைப் பொறுத்தது அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 867





இச்சமயத்தில் இளவரசர் இந்த நாட்டில் இருப்பது தெரிந்தால் மக்கள் கொதித்து எழுவார்கள். இளவரசரின் தலையில் இப்போதே மணிமகுடத்தைச் சூட்டிவிட வேண்டும் என்று பெரும் கிளர்ச்சி செய்வார்கள். பழுவேட்டரையர்களும் சண்டைக்கு எப்போது முகாந்தரம் ஏற்படும் என்று காத்திருக்கிறார்கள்.

கொடும்பாளூர் பெரிய வேளார் பெரும் படை திரட்டிக் கொண்டு தஞ்சையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். தேவி! சோழ நாட்டில் இரத்த வெள்ளம் ஓடப்போகிறது என்று அஞ்சுகிறேன். இந்தப் பெரிய சாம்ராஜ்யம் சகோதரச் சண்டையினால் அழிந்துவிடுமோ என்று பயப்படுகிறேன். அப்படி ஒன்றும் நேராமலிருக்க வேண்டும் என்று அல்லும் பகலும் ஸ்ரீரங்கநாதரைப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன்."

"என்னுடைய பிரார்த்தனையும் அதுவேதான், ஐயா! என் சகோதரர்கள் இந்த சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் ஏற வேண்டுமென்ற ஆசையை நான் விட்டுவிட்டேன். என்னைப் பொறுத்த வரையில் மதுராந்தகனுக்கே முடி சூட்டுவதில் இப்போது எனக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லை."

"தங்களுக்கு ஆட்சேபமில்லை, ஆனால் மக்களுக்கு ஆட்சேபம் இருக்கிறதே! சக்கரவர்த்தி இன்னும் பல்லாண்டு இவ்வுலகில் வாழ வேண்டும். ஆனால் விதிவசத்தினால் அவருக்கு ஏதாவது நேர்ந்து விட்டதென்றால் அன்றைய தினமே இந்தச் சோழ நாடு முழுவதும் ரணகளமாகி விடும்"

"ஐயா! அத்தகைய துர்க்கதி விரைவிலேயே நேர்ந்து விடுமோ என்று எனக்குப் பயம் அதிகமாயிருக்கிறது. நேற்றிரவு சக்கரவர்த்தியின் நிலை மிக்க கவலைக்கிடமாகி விட்டது. அதனாலேதான் அவரிடம் பொன்னியின் செல்வன் பத்திரமாயிருக்கிறான் என்று சொல்ல வேண்டியதாயிற்று. ஆனால், சொல்லியும் அவர் நம்பவில்லை! அவருக்கு நான் வெறுமே ஆறுதல் சொல்வதாக எண்ணிக் கொண்டார்.

பல வருஷங்களுக்கு முன்னால் மாண்டு போன 'பழிகாரி' ஆவி அவருடைய புதல்வர்களின் மீது பழி வாங்குவதாக எண்ணிப் பிரமை கொண்டு பிதற்றுகிறார்"

"அந்தோ, கடவுளே! என்ன விபரீதம்? நேற்று இரவு நடந்ததையெல்லாம் விபரமாகச் சொல்லுங்கள்!"

"அதற்காகத்தான் வந்தேன் ஐயா! சொல்லித் தங்களிடம் யோசனை கேட்பதற்காகவே வந்தேன். முன் தடவை சுந்தர சோழர் மருத்துவசாலை ஏற்படுத்துவதற்காக நான் வந்த சமயத்தில், சக்கரவர்த்தி எனக்கு அந்தப் பழைய வரலாற்றைக் கூறினார், ஈழ நாட்டை அடுத்த தீவில் தாம் ஒதுங்க நேர்ந்த போது, கரையர் மகள் ஒருத்தி தம்மைக் கரடிக்கு இரையாகாமல் காப்பாற்றியது பற்றிச் சொன்னார்.

பின்னர் அத்தீவிலேயே சில மாத காலம் சொப்பன சொர்க்கலோகத்தில் வாழ்வது போல் அந்தப் பெண்ணுடன் வாழ்ந்திருந்ததைப் பற்றிச் சொன்னார்.

பின்னர் இந்தத் தஞ்சை புரிக்கு அவர் அழைத்து வரப்பட்டதையும் கூறினார்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## புதியதாக வந்த நட்பும், உதவியும்



ஒரு ஊரில் ஒரு விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் நாய் ஒன்றை வளர்த்து வந்தான். அந்த நாய் நல்ல பலசாலியாகவும் புத்திசாலியாகவும் இருந்தது. அந்த விவசாயிடம் ஏராளமான மாடுகள் இருந்தன. அந்த மாடுகளை தினமும் மேய்ச்சலுக்கு விவசாயியும் அந்த நாயும் கூட்டிச் செல்வர். தினமும் காலையில் கிளம்பி அருகில் உள்ள மலைக் காடுகளுக்கு அழைத்துச் சென்று மாடுகளை மேய விட்டுவிட்டு மாலையில் வீட்டுக்கு கூட்டி வருவர். விவசாயி மாடுகளின் பின்னால் நடந்து வர. நாய் இரு பக்கமும் மாறி, மாறிச் சென்று கட்டுக்கோப்பாக காட்டுக்கு கூட்டிச்செல்லும், இவ்வாறு தினம் தினம் சென்று வருவதை நரி ஒன்று கவனித்து வந்தது.

நரிக்கு மிகவும் வயதாகிவிட்டது. அதனால் ஓடி ஆடி வேட்டையாட முடியவில்லை.

இந்த மாடுகளை பார்த்ததும், அதற்கு எச்சில் ஊறியது. ஆனால் நாயை பார்க்கவும் பயமாக இருந்தது. நாயும் நல்ல உயரத்துடன் பலசாலியாக இருந்தது. நரி எப்படியாவது மாட்டை வேட்டையாட சமயம் பார்த்துக்கொண்டிருந்தது.

அந்த மலைக்காடுகளில் வாழ்ந்து வந்த புலி ஒன்றுக்கு நரியைப் போலவே வயதாகி விட்டதால், முன்னைப் போல காட்டில் வேட்டையாட முடியவில்லை. காட்டை விட்டு வெளியே வந்து மனிதர்கள் வளர்த்து வரும் விலங்குகளை வேட்டையாடலாம் என்று கருதி வந்தது. அப்படி வரும்பொழுது இந்த வயதான நரியை பார்த்தது. நரியாருக்கு ஒரு துணை கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் மெல்ல புலியிடம் வந்து புலியண்ணா சவுக்கியமா? என்று கேட்டது. சந்தோசத்துக்கு என்ன குறைச்சல் ; என்று பதில் சொன்னது புலி. என்ன புலியண்ணா ரொம்ப வருத்தமா பேசறீங்க, என்று நரியார் கேட்க, எனக்கு வயசாயிடுச்சு முன்ன மாதிரி வேட்டையாட முடியல்ல, அதுதான் இந்த மனுசங்க வளர்க்கற ஏதாவது கிடைக்குமான்னு தேடி வந்தேன் என்றது. நரிக்கு உடனே ஒரு திட்டம் தோன்றியது.

நான் ஒரு திட்டம் வச்சிருக்கேன், நீங்க மட்டும் சரின்னு சொன்னா நமக்கு நல்ல வேட்டை கிடைக்கும், நீங்க பாதி நான் பாதி எடுத்துக்கலாம், என்ன சொல்றீங்க? என்று கேட்டது நரி. புலிக்கு கோபம் வந்துவிட்டது, நீ எனக்கு சமமா பாதி கேட்கிறாயே, அப்படீன்னா இந்த திட்டமே வேண்டாம் என்று சொல்லி விட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்கு நாம் செய்யும் உதவிகள் நமது வாழ்வின் மதிப்பை உயர்த்தும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கு...

போக்குவரத்துத் தொடர்பான யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று 18ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் போக்குவரத்து பெருந்தெருக்கள் துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க பங்குபற்றவுள்ளார்.

போக்குவரத்துத் தொடர்பில் யாழ்.மாவட்டத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்த அமைச்சருக்கு முதலில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

காரணம், போக்குவரத்துத் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகளை யாழ்.மாவட்டம் உள்ளிட்ட வட மாகாணம் எதிர்கொண்டுள்ளது.

அந்தவகையில் யாழ்.மாவட்டத்தை மையப்படுத்தி, போக்குவரத்துத் தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவதன் மூலம், பல்வேறு பிரச்சினைகள் பேசப்படுவதற்கும் அதற்கான தீர்வுகளை எட்டுவதற்கும் வாய்ப்பாக அமையும்.

ஆம், போக்குவரத்துடன் தொடர்புபட்ட அத்தனை பிரச்சினைகளையும் சம்பந்தப்பட்டவர்கள் இன்றைய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் முன்வைப்பார்கள் என நம்பலாம்.

பொதுவில் எங்கள் யாழ்ப்பாண மத்திய பஸ் தரிப்பு நிலையம் என்பது இப்போதும் ஆதி காலத்துத் தன்மையுடன் இருப்பதைக் காண முடியும்.

உண்மையில் சமகாலத்து மத்திய பஸ் தரிப்பு நிலையம் என்பது அனைத்து வசதிகளும் நவீனத்துவத்துடன் கூடியதாக அமையப் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் எங்கள் யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையம் அடிப்படை வசதிகளற்றதாக இருப்பதைக் காண முடிகிறது.

இதேபோல எங்கள் புகையிரதப் போக்குவரத்தை எடுத்துக் கொண்டால், பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் மற்றும் போதிய சமிக்ஞை ஒலிகள் இல்லாத கடவைகள் எனப் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன.

இத்தகைய பிரச்சினைகளால் ஏற்பட்ட உயிரிழப்புகள் பல. இருந்தும் அந்தப் பிரச்சினைகள் இன்னமும் சீர்செய்யப்படாமல் உள்ளன.

இதற்கும் மேலாக, போக்குவரத்து நெருக்கடி உள்ள வீதிகள் மற்றும் சந்திகளில் வீதி சமிக்ஞை விளக்குகளோ அன்றிப் போக்குவரத்துப் பொலிஸாரின் சேவைகளோ இல்லாத காரணத்தால், மக்கள் படுகின்ற அவலங்கள் ஏராளம்.

உண்மையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள வீதி சமிக்ஞை விளக்குகளின் எண்ணிக்கையைக் கணக்கிலெடுத்தால், ஏனைய நகரங்களுடன் ஒப்பிடுகையில் அவை மிகவும் சொற்பம் எனலாம்.

அதேநேரம் நாட்டின் அநேகமான நகரங்களில் போக்குவரத்து நெருக்கடி உள்ள இடங்களில் போக்குவரத்துப் பொலிஸாரின் சேவை காலை, மாலை எனக் கிடைக்கப் பெறுகிறது.

ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரபலமான ஒரு சில பாடசாலைகளுக்கு முன்பாக பொலிஸாரின் சேவை கிடைக்கப் பெறுகிறதேயன்றி மற்றும்படி எந்தச் சந்தியிலும் போக்குவரத்துப் பொலிஸார் நின்று ஒழுங்குபடுத்துவதை மருந்துக்கும் காணமுடியாது.

எனவே இவை தொடர்பிலும் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

# புதிய அரசியலமைப்பு நிச்சயம் மலரும்

## சர்வாதிகார ஜனாதிபதி முறைமை நீங்கும்

### பிரதியமைச்சர் அபேசிங்க உறுதி

அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சர்வாதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு ஜனாதிபதி பொறுப்புக் கூறும் வகையில் புதிய முறைமை உருவாக்கப்படும் என பிரதியமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்தார்.

ஊடகசந்திப்பொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு மேலும் உரையாற்றிய அவர்,

தேசிய மக்கள் சக்தியின் ஐந்து வருடகாலத் திட்டத்தில் புதிய அரசியலமைப்பு மாற்றம் நிச்சயம் கொண்டுவரப்படும். எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து விடயங்களையும் ஐந்து வருடங்களுக்குள் நிறைவேற்றவுள்ளோம்.

அதில் அரசியலமைப்பு மாற்றமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.புதிய அரசியலமைப்பு மாற்றத்தில் சர்வாதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறும் புதிய முறைமை உருவாக்கப்படும்.

2029ஆம் ஆண்டுக்கு முன் புதிய அரசியலமைப்புச் சட்டம் நிச்சயம் உருவாக்கப்படும். ஜனாதிபதி அநுரவுக்கு பின்னர் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக யாரும் இருக்கமாட்டார்கள்.

நாங்கள் சமர்ப்பித்துள்ள சொத்து விபரங்கள் தொடர்பில் பல கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இதற்கு முன்னர் இவ்வாறு நடந்துள்ளதா? என நினைத்துப் பாருங்கள். இதை நேர்மறையாக நோக்குங்கள்.

நாங்கள் அரசியலுக்கு வரும்போது எவ்வளவு சொத்து இருந்தது அரசியலை விட்டுச் செல்லும்போது எவ்வாறு என்று மக்கள் தெரிந்து கொள்ளமுடியும்.

இதற்கு முன்னர் இருந்த அரசியல்வாதிகள் வரும் போது இருந்த சொத்தின் மதிப்பும் பின்னரும் எவ்வாறு அதிகரித்தது என்பதில் எமக்கிடையில் ஒரு உரையாடல் மட்டுமே இருந்தது. ஆனால் நாங்கள் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுகிறோம் என்றார். (ம-7)

## சஜித்துடன் சங்கமித்தோரின் உறுப்புரிமை மீதான தடைநீக்கம்

### ரணில் – சஜித் இணைவுக்கு பிள்ளையார் சுழியிடும் ஐ.தே.க

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த அனைத்துத் தடைகளையும் நீக்குவதற்கு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்தின் போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கை எடுப்பதில் ஏற்படக்கூடிய சட்டப் பின்னணி குறித்து ஆராய முன்னாள் சட்டமா அதிபரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான திலக் மாரப்பன தலைமையிலான குழுவை நியமிக்கவும் இதன்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கு இந்த தீர்மானத்தின் ஊடாக மீண்டும் இணைந்து பணியாற்றுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் பங்கேற்ற அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையிலான யோசனை ஒன்றும் இதன்போது நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## பெருங்குறைபாடுகளுடன் பண்ணை மீன் சந்தை

### இளங்குமரன் எம்.பி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம் - பண்ணை மீன் சந்தையில் பாரிய பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே மாநகர சபை முதல்வர் நேரில் வந்து பார்த்து அந்தப் பிரச்சினைகளைச் சீர் செய்யுமாறு பாராளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதிக்குக் களவிஜயம் செய்து பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாநகர சபையினர் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாததால் மின்சாரத் துண்டிப்பு இடம்பெற்றது. இதனால் வியாபாரிகள் தமது மீன்களை விற்பனை செய்ய முடியாது திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

ஆனால் மின்சாரம் துண்டித்த நாளின் கட்டணம் மாநகரசபையால் மீன் வியாபாரிகளிடமிருந்து அறவிடப்பட்டது.

மீன் சந்தையில் இருக்கின்ற மலசலகூடம் மிகவும் மோசமாகக் காணப்படுகிறது. மாநகர சபை முதல்வரிடம் நான் கேட்பது யாதெனில், நீங்கள் களவிஜயம் செய்து நேரில் வந்து பாருங்கள் இங்கே எவ்வாறான நிலை காணப்படுகிறது என்று.

வெளிநாடுகளிலிருந்து நிதி உதவிகளை பெற்று அரசாங்கம் இவ்வாறான சந்தைகளை அமைத்துத் தரும்போது மாநகரசபையினர் ஆகிய நீங்கள் அதனைச் சிறந்த முறையில் பராமரியுங்கள். (ம-7,104)

## யாழில் புகையிரதம் மோதி மாடு உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - புங்கன்குளம் ரயில் நிலையப்பகுதியில் புகையிரதத்துடன் மோதி மாடு ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

புகையிரதம் வருவதை அவதானிக்காது புங்கன்குளம் ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள தண்டவாளத்தினூடாகப் பயணித்த போதே புகையிரதம்மோதியதில் படுகாயங்களுக்குள்ளாகி மாடு உயிரிழந்துள்ளது. (ம-7)

## பொலிஸ் நிலையத்திற்குள் திடீரென நுழைந்த யானை


### மல்லாவியில் பரபரப்பு

மல்லாவி பொலிஸ் நிலையத்திற்குள் காட்டு யானை நுழைந்ததால் பொலிஸ் நிலையத்தில் நேற்று பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. மல்லாவி நகர வீதியூடாக சென்ற குறித்த காட்டு யானை பொலிஸ் நிலையத்தின் கதவு திறந்திருப்பதைப் பயன்படுத்திக் கொண்டு திடீரென மல்லாவிப் பொலிஸ் நிலையத்திற்குள் நுழைந்துள்ளது.

குறித்த யானையை விரட்டும் பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. குறித்த பகுதிகளில் அண்மைக் காலமாக காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி
### பகுதி VI

03

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம் (The Ceylon Workers' Federation) தோற்றம்**

1920 இல் சேர். பொன் அருணாசலம், தமது தொழிலாளர் சங்கத்தை விஸ்தரித்து இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம் (The Ceylon Workers' Federation) எனும் இயக்கத்தைத் தோற்றுவித்தார். இச்சங்கத்தின் முயற்சிகளின் பெரும் பயனாகவே, தொழிலாளர் சட்டத்தில் இருந்த தொழிலாளரைத் தண்டிக்கும் ஏற்பாடுகள் நீக்கப்பட்டன.

இந்தியத் தொழிலாளருக்குப் பாதகமான முறையில் நிலவி வந்த "துண்டு" முறையினை ஒழிப்பதற்கு சங்கம் பெரிதும் போராடிற்று. 1921 இல் தொழிலாள இயக்க வீரர்களில் ஒருவரான கேர்ணல் ஜோசையா வெட்ஜ்வுட் (Col.Josiah Wedge wood) இலங்கை வந்து, பல விரிவுரைகள் நிகழ்த்தினார்.

அவ்வாண்டு, அவர் பிரித்தானிய பாராளுமன்றத்தில், சேர்.பொன் அருணாசலம் அவர்களுக்கு ஒரு புகழ்மாலை சூட்டினார். 1921, யூலை 14 இல் அவர் பேசும் பொழுது கூறியதாவது: "இலங்கையில் ஏறக் குறைய அடிமைகள் போல் வசித்துவரும் தொழிலாளர் சார்பில் இருவர் பெரும் தொண்டாற்றி வருகின்றனர். ஒருவர் வண.C.F. அன்ட்றூஸ் மற்றவர் முன்னைநாள் அரசாங்க ஊழியரான சேர். பொன் அருணாசலம். தொழிலாளரின் நிலைகளுக்குப் பரிகாரம் தேடும் அவர், தமது நாட்டுத் தொழிலாளருள் ஒரு பெரும் பகுதியினருக்கு விடுதலையைத் தேடித் தந்திருக்கின்றார். அவருக்கு இச்சபையில் எனது நல்வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்' எனக் கூறி முடித்தார்.

சேர்.பொன் அருணாசலம் அவர்களது முயற்சியினதும், பெரும்பாலும் இந்திய அரசாங்கத்தின் வற்புறுத்தலினதும் பயனாக, 1921 இல் "துண்டு" முறை ஒழிக்கப்படலாயிற்று. எனினும், நடுத்தர வகுப்பின் தலைவர்களினால் நடாத்தப்பட்ட இத்தொழிலாளர் இயக்கத்தின் பயனாக, தொழிற் சங்கங்கள் இலங்கையில் தோன்றி வளர்ந்தன என்று கூறிவிட முடியாது.

இந்தியத் தொழிலாளரின் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு காணும் முதற் தொழிற் சங்கம், பத்திரிகை ஆசிரியரும், சட்டக்கழக உறுப்பினருமாக இருந்த திரு.K. நடேச ஐயர் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. 1929 அளவில் அவர் அகில இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தை அமைத்துத் தொண்டாற்றினார். பின்பு அவர், இலங்கை இந்தியத் தொழிலாளர் சம்மேளனத்தை நிறுவினார்.

**இலங்கைத் தொழிற் சங்கம்:**

1922 ஒக்டோபர் மாதம் 10 ஆம் நாள் திரு.A.E.குணசிங்க என்பவரின் பெரு முயற்சியினுல் இலங்கைத் தொழிற் சங்கம் (Ceylon Labour Union) நிறுவப்பட்டது. இச்சங்கம் கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் பல பிரசார இயக்கங்களை நடத்தி தொழிலாளர் மத்தியில் ஒரு புத்துணர்ச்சியைத் தட்டி எழுப்பிற்று.

1923 பெப்ரவரி 15 ஆம் நாள், புகையிரதத் தொழிலாளர் மத்தியில் எழுந்த வேலை நிறுத்தம், விரைவில் துறைமுகம், வெள்ளவத்தை மில்ஸ், கொழும்பு பொறியியல் கம்பனிகள் (வாக்கர்ஸ், பிறவுண்ஸ்), மாநகர சங்கம் ஆகிய வேலைத் தளங்களுக்குப் பரவி, மொத்தம் 15,000 க்கு மேற்பட்ட தொழிலாளர் அதில் பங்குபற்றலாயினர்.

அவ்வாண்டு மார்ச் மாதம் வேலை நிறுத்தம் முடிவடைந்த பொழுது, குணசிங்காவும் அவரது தொழிற் சங்கமும், தொழிலாளர் இயக்கத்தின் முன்னணியில் நின்றது. அதனைத் தொடர்ந்து நீர் கொழும்பு, நாவலப் பிட்டி, பதுளை போன்ற மாவட்டங்களில் கிளைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன, 1925 இல் அரசாங்கமும் தனியார்துறை முதலாளிகளும் தொழிலாளரின் வேதனங்களை 20 விகிதம் அதிகரிக்க உடன்பட்டனர்.

1926, 1927 எனும் ஆண்டுகளிலும் பல வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. இவை தாம், தொழிலாளர் ஒற்றுமையாக நேர் நடவடிக்கைகளில் இறங்கிய முதல் இயக்கங்களாகும். 1928 இல் அகில இலங்கை தொழிற் சங்க மகாசபை (Al-Ceylon Trade Union Congress) நிறுவப்பட்ட பொழுது, 40,000 அங்கத்தினரைக் கொண்ட 22 தொழிற்சங்கங்கள் அதில் ஒன்று சேர்ந்தன.

**இலங்கையில் வங்கிக் கிளைகளை நிறுவுதல்**

கோப்பித் தொழிலை அழித்த கோப்பிப் புழு, 1851 இல் நிறுவப்பட்ட ஒறியண்டல் வங்கியையும் பீடித்தது. 1884 இல் 'வேலைநிறுத்தம் எங்கும் பரவியது. வங்கியின் கொழும்புக் காரியாலயத்தை பீதியுடைந்த வைப்புக் காசு உடையவர்களும், கடதாசி நாணய உடைமையாளர்களும் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் வங்கியின் கதவுகளை உடைத்துத் திறப்பதை இராணுவப் படையினரின் சமூகந்தான் தடுத்தது, "என எழுதினர் E.H. லோறன்ஸ். தீவின் ஆள்பதி சேர், ஆத்தர் கோடன் தலையிட்டு, வங்கியின் கடதாசி நாணயங்களுக்குப் பணம் செலுத்துவதாக உத்தரவாதம் அளித்ததால் நிலைமை காப்பாற்றப்பட்டது.

வங்கியின் பங்குக்காரர் தமது முதல்கள் முழுவதையும் இழந்தனர். இச்சம்பவத்தினால் கிடைத்த அனுபவம், வங்கிகளுக்கு, வெப்ப வலயப் பயிர்ச் செய்கையிலுள்ள ஆபத்துக்களுக்கு ஓர் உன்னத பாடமாக அமைந்தது.

இதன் பின்பு தெற்கு, கிழக்காசிய நாடுகளில் இயங்கி வந்த சில வங்கிகள் இலங்கையிலும் கிளைகளை நிறுவின. மேர்க்கன் ரைல் வங்கி (Mercantile Bank), நஷனல் வங்கி (National Bank), சாட்டட் வங்கி (Chartered Bank), ஹொங் கொங் அன்ட் ஷங் ஹாய் வங்கி (Hongkong and Shanghai Bank), என்ற வங்கிகளும் பின்னர் ஈஸ்ரன் வங்கி (Eastern Bank), பி. அன்ட. ஓ. (P & O) வங்கி ஆகியனவும் இங்கு கிளைகளை நிறுவின. பல இந்திய வங்கிகளும் கிளைகளைத் திறந்தன.

இக்காலத்தில் பெருகிவந்த தென்னந் தோட்டங்களிலும் இறப்பர்த் தோட்டங்களிலும் முதலீடு செய்த இலங்கையர், இத்தகைய வங்கிகளினின்று, பண உதவி பெற முடியாமற் போயிற்று. வம்சாவழிப் பண வர்த்தகர்களான தென்னிந்திய இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த செட்டிகள், இந்திய வங்கிகளினின்று பணம் பெற்றுக் கூடுதலான வட்டிக்கு இலங்கையருக்குக் கடன் கொடுத்தனர்.

அவர்களில்லாதிருந்தால் இலங்கையின் செல்வநிலை இன்றுள்ள நிலைக்கு வந்திருக்க முடியாது என C. B. A. டயஸ் என்னும் பிரபல்ய இலங்கைத் தோட்ட முதலாளி 1934 இல் வங்கி விசாரணைச் சபையின்முன் சாட்சியமளித்தார்.

இலங்கைப் பொருளாதாரத்தின் நிதியமைப்பு முற்றிலும் பிறநாட்டவர்களின் கைகளில் இருப்பதை இலங்கைத் தலைவர்கள் வரவேற்க வில்லை. இலங்கைவாசிகள், பெருந்தொகைக் கடனைப் பெறுவதற்கு பிரித்தானிய வங்கிகளை அல்லது இந்தியச் செட்டிகளை நாட வேண்டியிருந்தது. இந்நிலையைப் போக்குவதற்கு 1935 இல் அரசாங்க உதவியுடன் இலங்கை வங்கி (Bank of Ceylon) நிறுவப்பட்டது 1940 இல் விவசாய, தொழில் கடன் கார்ப்பரேஷன் (Agricultural and Industrial Credit Corporation) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

**போக்குவரத்து வசதிகளின் விருத்தி**

**தெருக்கள் :**

ஆள்பதி ஹோட்டன் தொடங்கிய தோட்டப் பிரதேசங்களுக்குத் தெருக்களைத் திறக்கும் முயற்சி, அதன் பின்னரும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. தோட்டங்களின் அபிவிருத்தியில் அதிக கவனமும் சிரத்தையும் காட்டிய சேர். ஜோர்ஜ் அன்டர்சன், சேர்.ஹென்றி உவாட், சேர். ஹேர்க்கி யூலிஸ் றொபின்சன் எனும் ஆள்பதிகள் தெருக்களை அமைக்கும் விடயத்தில் முன்னிலும் கூடுதலான ஊக்கம் காட்டினர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சா கலந்த...

கலந்த மாவா விற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து 470 கிராம் கஞ்சா கலந்த மாவா மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் போதைத் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)






















## மந்திரி மனையின்...

ஆண்ட சங்கிலிய மன்னனது மந்திரி மனை நல்லூரில் சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ளது.

அந்தக் கட்டடம் உடைந்து விழும் நிலையில் காணப்பட்டது. அதனை அடுத்து அதற்கு முட்டுக்கொடுத்து கம்பிகள் நடப்பட்டிருந்தன.

அதேவேளை மந்திரி மனையை புனரமைக்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்நிலையிலேயே யாழில் நேற்றுப் பெய்த மழை காரணமாக மந்திரி மனையின் ஒரு பகுதி இடிந்து விழுந்துள்ளது.

யாழ்ப்பாண இராசதானி காலத்திற்குரியதாகக் கருதப்படும் மந்திரி மனை பாதுகாக்கப்பட வேண்டிய தொல்பொருள் சின்னமாக 2011ஆம் ஆண்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## யாழ்.கடவுச்சீட்டு...

உட்புகுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் கடவுச்சீட்டுச் சேவைகளைப் பெறச் சென்ற மக்கள் கடும் அவதியுற்றிருந்தனர்.

யாழ். மாவட்டச் செயலக வளாகத்தில் அண்மையில் ஜனாதிபதியினால் கடவுச்சீட்டு அலுவலகம் திறந்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கிளிநொச்சியில்...

கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 10 வீட்டுப் பகுதியில் வெடிக்காத நிலையில் பீப்பாய் ஷெல் ஒன்று நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் காணி துப்பரவுப் பணி மேற்கொண்ட பொழுது குறித்த ஷெல் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் நீதிமன்றத்தின் அனுமதியுடன் குறித்த ஷெல்லை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7, 316)

## திலீபனுக்கு...

மக்கள் முன்னணியினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் நேற்றுப் புதன்கிழமை மாலை கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் தியாக தீபத்திற்கு அஞ்சலி செலுத்தச் சென்றிருந்தனர்.

அதன்போது அங்கிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அமைச்சரை அஞ்சலி செலுத்த அனுமதிக்கமாட்டோம் எனத் தடுத்து நிறுத்தி முரண்பட்டனர். (ம-7)

## கொழும்புத்துறை...

ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகரின் நிதியொதுக்கீட்டின் கீழ் குறித்த இறங்குதுறை புனரமைக்கப்படவுள்ளது.

நீண்டகாலமாக இறங்குதுறையின் பாதை கடலரிப்பினால் இருமருங்கும் சிதைவுற்ற நிலையிலும் முனையம் மூன்று பக்கமும் மண்ணரிக்கப்பட்டுச் சிதைவடைந்ததாயும் காணப்படும் நிலையில் குறித்த இறங்குதுறைக்கான பாதை அகலப்படுத்தலுடன் முனையம் சீர்ப்படுத்தலும் இடம்பெறவுள்ளது. (ம-7,33)

## ஒருங்கிணைப்பு...

குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

போக்குவரத்து, பெருந்தெருக்கள் துறைமுகம் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க பங்குபற்றுதலுடன் குறித்த கூட்டம் நடைபெறவுள்ளது. (ம-7)

## இலங்கை...

ரங்களைத் திரட்டும் செயற்றிட்டத்தை இரண்டு வருடங்களுக்குப் பிற்போடுமாறு சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் விடுத்த கோரிக்கையைப் பிரிட்டன் நிராகரித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் கடந்த 8ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. தொடக்க நாள் அமர்வில் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க்கினால் இலங்கை குறித்த எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து அந்த அறிக்கை மீதான விவாதம் இடம்பெற்றது.

இந்நிலையில் அந்த பிரேரணை தொடர்பான உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை இலங்கை நேரப்படி பி.ப. ஒரு மணிக்கு ஜெனிவாவில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பிரிட்டன், வட அயர்லாந்து, கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா ஆகிய நாடுகளின் ஜெனிவாவுக்கான நிரந்தர வதிவிடப்பிரதி நிதிகளும், பேரவையில் அங்கம் வகிக்கும் இலங்கைக்கு ஆதரவான மற்றும் எதிரான சில நாடுகளின் பிரதிநிதி களும் ஜெனிவாவுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப்பிரதிநிதி உள்ளிட்ட அதிகாரிகளும் அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது இலங்கை அரசின் சார்பில் கருத்து வெளியிட்ட வதிவிட அலுவலகப் பிரதிநிதி, இலங்கையில் இனப்பிரச்சினை நடைபெறவில்லை எனவும் மாறாக பயங்கரவாத மோதலே நடைபெற்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சிறப்புப் பொறிமுறையொன்று அவசியமில்லை என்றும் நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள குற்றவியல் நீதிக்கட்டமைப்பின் ஊடாகவே இதற்குத் தீர்வு காண முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**


- நல்லூர் குறுக்கு வீதி முகப்புடன் யாழ். மாநகர சபை முன் வீதி
- நல்லூர் ஆலயத்தில் இருந்து 500m தூரம்
- பருத்தித்துறை வீதி 150m, செட்டித்தெரு 50m
- நாவலர் வீதி 150m, கச்சேரி நல்லூர் வீதி 100m
- இரண்டு பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 3 கோடி (மூன்று கோடி)
- நல்ல சுற்றுச்சூழல்
- அனைத்து ஆவணங்களும் சரியாக உள்ளன.

(5446)

தொடர்புகளுக்கு :

**077 468 3354, 077 288 0152**
**076 860 2770**
**Golden Real Estate (Pvt) Ltd**


## அமெரிக்கத் தூதுவருடன் விஜித ஹேரத் சந்திப்பு



(கொழும்பு)

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தை அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சந்தித்துள்ளார். இந்த சந்திப்பு தொடர்பில் எக்ஸ் தளத்தில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பதிவிட்டுள்ளதாவது,

நியாயமான, சமநிலையான வர்த்தகத்தை மேம்படுத்துதல் மற்றும் துறைமுகங்கள் முதல் பொது மக்கள் வரை அமெரிக்க - இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் தொடர்பில் கலந்துரையாடினோம்.

இந்தோ - பசிபிக் பங்காளர்களாக நாங்கள் பாதுகாப்பு மற்றும் திறந்த வர்த்தகத்தைப் பாதுகாக்கிறோம். பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்புக்கு முக்கியமான கடல் பாதைகளைப் பாதுகாக்கிறோம் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால சீனா பயணம்

பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால மாநாடு ஒன்றில் கலந்து கொள்ளவதற்காக சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஆனந்த விஜேபாலவுடன் பொலிஸ் மா அதிபரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றுள்ளார்.

இதனால் பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரப் பதில் அமைச்சராகப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகலவை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நியமித்துள்ளார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3910)

**076 825 7716** (ஆகாஸ்)


## அறிக்கை...

திகதியன்று சமர்ப்பிக்குமாறு யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு ஊர்காவற்றுறை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சுமார் 35 வருடங்களுக்கு முன்னர் மண்டைதீவு படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய சடலங்கள் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் கிணறுகளை அகழ்ந்து, குறித்த சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட்டு உண்மைகள் வெளிக்கொணரப்படுவதுடன் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு நீதியும் பரிகாரமும் வழங்கப்பட வேண்டும் என்று கோரி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் இருவேறு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.


இந்நிலையில் குறித்த முறைப்பாட்டை ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்கு பதிவுசெய்த ஊர்காவற்றுறை பொலிஸார் அகழ்வுப் பணியை மேற்கொள்வதற்கான வசதிகள் தம்மிடம் இல்லை என நீதிமன்றில் சுட்டிக்காட்டியதை அடுத்து குறித்த வழக்கு யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டது.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் குறித்த வழக்கு பாரப்படுத்தப்பட்ட நிலையில் நேற்று குறித்த வழக்குத் தொடர்பாக தரவுகளை வழங்கக் கோரப்பட்டிருந்தது.

ஆனாலும் யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் நீதிமன்றில் கால அவகாசம் கோரியதால் எதிர்வரும் நவம்பர் 12 ஆம் திகதிக்கு கால அவகாசம் வழங்கிய நீதவான் அன்றையதினம் அறிக்கை சமர்பிக்க வேண்டும் என உத்தரவிடார். (ம-7,33)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 10 - 1960 | 16 - 09 - 2025 |



## சுந்தரலிங்கம் விஜயகுமார்

இணுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு காங்கேசன்துறை வீதியை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் விஜயகுமார் கடந்த (16.09.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் - சிதம்பரேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - ராசமலர் தம்பதியினரின் அன்பு மருமகனும் தங்கராணி அவர்களின் பாசமிகு கணவரும் சிந்து (ஜேர்மனி), ராகுலன் (ஜேர்மனி), விதுஷிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சதீஸ் (ஜேர்மனி), வாசுகி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அமரர் நவசிவராசா, மல்லிகாதேவி, புஸ்பராசா, அமரர் இராசகுமார் (ஜேர்மனி), உதயகுமார் (ஜேர்மனி), பாலகுமார் (ஜேர்மனி)ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் கிருஷ்ணானந்தன், குணானந்தன், சுதாகினி ஆகியோரின் மைத்துனரும் அக்ஷனா, ஆரோகி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (18.09.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(5443)

இணுவில் கிழக்கு,
இணுவில். 076 748 4751

*தகவல் :* மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-39908)

**V2 TRAVELS** 076 1410725, 076 8226236
v2vacancies@gmail.com

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378 | 076 097 3127**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். கோப்பாய் இராசபாதை வீதியில் ரெஜினிங் கொலிஜ்க்கு முன்பாக 18 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரித்து 20 அடிப் பாதையுடன் விற்பனைக்கு உண்டு குடியிருப்புச் சூழல், நல்ல நீர்க்கிணறு, செம்மண் தரைக் காணி.

பார்வையிடும் நேரம் :- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

பிரதான போக்குவரத்துச் சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக

(5438)

தொடர்புகளுக்கு : **விமல்**

**076 755 8606, 077 638 5683**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 181 பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org